KUMARASWAMI PULAVAR
JAFFNA
CHUNNAKAM

THE
# GNANAPIRAKASAM.
A MONTHLY JOURNAL DEVOTED TO RELIGION, LITERATURE, SCIENCE &c.

# ஞானப்பிரகாசம்.

யாழ்ப்பாணத்திற் பிரசுரமாகும்

## ஒரு மாதாந்தத் தமிழ்ப் பத்திரிகை.

"தொட்டனைத் தூறு மணற்கேணி மாந்தர்க்குக்
கற்றனைத் தூறு மறிவு" திருக்குறள்.

புத்தகம் - க. யாழ்ப்பாணம்:—சாதாரண௵ ஐப்பசி, கார்த்திகைமீ. இலக்கம் ரு, சு.

## விஷயசூசிகை.


| | |
|---|---|
| இந்துமாணவகர்கள் | பத்திராதிபர். |
| புண்ணியபதிதசசந்தாரம் | ,, |
| குமணவள்ளல் | ,, |
| சைவபோதம் | ,, |
| தொல்காப்பியச்செய்யுளமுது | ,, |
| தமிழ்வசனநடை | ,, |
| வைத்தியவிசாரம் | ,, |
| நீதிவாக்கியங்கள் | ,, |
| நல்லவெண்பா | ,, |
| கலயாத்திரைப்பொதுவிதி | சிவ. இ. பார்முத்துஉபாத்தியாயர். |
| சிவபூசை | மா. சிவராமலிங்கம்பிள்ளை. |
| திருமுருகாற்றுப்படை ஆராய்ச்சி | அ. க. வைத்தியலிங்கஉபாத்தியாயர். |
| சீதனம் | தி. சிவசிதம்பரம்பிள்ளை. |
| விளாங்குளச்சைவப்பிரசங்கம் | கேட்டுமகிழ்ந்தோர்ஒருவர். |
| கமலாமலைசரித்திரம் | மா. சிவராமலிங்கம்பிள்ளை. |
| சமாசாரம் | பத்திராதிபர். |
| பத்திரிகைகளின்வரவு | ,, |
| புத்தகவரவு | ,, |


*B. M. A. Sanmugaretna Sarma, Editor.*
*P. Manickam Pillai, Proprietor.*

யாழ்ப்பாணம் திருஞானசம்பந்தர் அச்சுக்கூடத்தில் அச்சிடப்பட்டது.

குமாரசுவாமிப்புலவர் நூ
புலவகரகம்,
மயிலணி : : சுன்னாகம்,
இலங்கை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

THE SAIVA SIDDHANTA
CONFERENCE
AT
RAMNAD.

*We are glad to learn from Mr. V. V. Ramanan, the newly-elected Honorary Secretary to the Saiva Siddhanta Conference will hold its Annual sittings this year at Ramnad, on the 25th, 26th and 27th December, under the Presidency of Mr. K. Puttanna Chettiyar, Senior Councillor to His Highness the Maharaja of Mysore.*

*Ed. G. P. M.*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஞானப்பிரகாசம்.

மாதம் ஒருமுறை பிரசுரமாகும்.

புத்தகம் - க. யாழ்ப்பாணம்:—சாதாரண௵ ஐப்பசி, கார்த்திகை௴. இலக்கம் - ரு, ச.

புலவர் ... புலவகரகம், மயிலணி : : சுன்னாகம், இலங்கை.

உ

கணபதிதுணை.

மந்திரநான்மறையாகிவானவர்
சிந்தையுணின்றவர்தம்மையாள்வன
செந்தழலோம்பியசெம்மைவேதியர்க்
கந்தியுண்மந்திரமஞ்செழுத்துமே.

## தமிழ்த்தெய்வவணக்கம்.

மறைமுதற் கிளந்த வாயான்
மதிமுகிழ் முடித்த வேணி
யிறைவர்தம் பெயரை நாட்டி
யிலக்கணஞ் செய்யப் பெற்றே
யறைகடல் வரைப்பிற் பாடை
யனைத்தும்வென் றாரி யத்தோ
டெழ்தரு தமிழ்த்தெய் வத்தை
யுண்ணினைந் தேத்தல் செய்வாம்.

## ஞானப்பிரகாசம்

## இந்துமாணவகர்கள்.

இந்துமாணவகர்கள் ஆங்கிலேய பாஷாப்பியாசஞ்செய்தல் காரணமாகப் புறமதத்தினர் தாபித்து நடத்தும் கலாசாலைகளிலே கற்கப்புகும் கடப்பாடுடையர்போலத் தம்மை மதிக்கின்றனர். கற்கப்புகும் இந்துமாணாக்கர்களோ தங்கள் சமயநூல்களாகிய வைதிக சாத்திரங்களை அணுவளவேனும் கற்றறியாத் துர்ப்பாக்கியமுடையோர். ஆதலி னியல்பான அறிவின்வலி சிறிதுமில்லாதவர். அறிவின் வலியும் சமயநூலுணர்ச்சியுமற்று, இயற்கையாய் நின்ற அவரது மனமெனப்படும் கண்ணாடியிற் புறமதக்கொள்கைகள் படியுங்கால், தம்முடையன யாவும் விளக்கங் குன்றிக் குன்றிக் கெட்டொழிகின்றன. இவ்வாறு படிமுறையானே விவேக விளக்கம் குன்ற கேடுற்ற அவர் மனதில், பின்னர் நம் வைதிகாசாரியர்போதிக்கும் ஆரிய சாஸ்திரப் போதனைகள் சென்று நுழைதற் கிடம்பெறாவாய், பஞ்சிற்பட்டு மீளும் பாணங்கள் போலப் பிறக்கிட்டு ஒழிந்து ஓடுகின்றன. இந்துமத சாஸ்திரக் கல்வி, ஒழிதலொன்றா! இந்து வருணாச்சிரம தருமங்களும், அவர்களைப்பயப்பயவிட்டுநீங்கி விடுகின்றன. அவரைப்பற்றிநின்ற இந்துமணம் தன்னியல்குன்றி அடங்கிவிடுகின்றது. மெய்ச்சமய பத்தியாசாரம் முழுதுங்கெட்டு இழிந்த பிறப்பினராகின்றார்கள். இவருட் சிலர் சமயக்கொள்கைகளொன்றுமின்றி நாத்திகம்பேசி நாத்தழும் பேறுகின்றார். ஒரு சிலர் பொருளாசை போகவாசை காரணமாக, புறச்சமயிகளேயாகிப் பதிதராகின்றார்கள். ஒரு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிலர் தாம் புறச்சமயிகள்போலச் சமயோசிதமாக நடிக்கின்றார்கள். அதுவுமொரு பெருமையைத் தருந் திருந்திய நெறி என உலகின ரெண்ணுவரெனவும் மதிக்கின்றார்கள். சிற்றுண்டிகள் உண்ட பின் நீராற் செய்யுஞ் சுத்தியினும், தூலிழைகொண்டு, பற்களைத் துடைத்தல் நாகரிகமென்று எண்ணுகின்றார்கள் வேறு சிலர்.

இந்துமாணவர்களுக்கு ஆங்கிலேய வித்தியாப்பியாச மென்னும் ஞானமிர்தபானம், இன்றியமையாச் சீவனோபாய ஏதுவேயாம். ஆயின் நாவுக்கினிய அறுசுவை உணவு உடம்பினை வளரச்செய்யுமாறு போல, செவிக்கினிய வித்தியாமிர்தம் உயிரறிவினை வளரச்செய்வதற்கு சிறந்துநிற்கும் சாதனமேயாம். விடத்தொடு கலந்த சுவையுடை உணவு உயிர்வாழ்விற்குக் கேடு பயப்பதுபோல, அஞ்ஞானங் கலந்த வித்தியாமிர்தம் அறிவினைப் பங்கப்படுத்தற் கேதுவாகும். நம்மிந்துக்கள் வித்தியாமிர்தமுண்டு எம்மையினும் நித்தியானந்த வாழ்வுபெறவேண்டின் வைதிக சாஸ்திராமிர்தம் நாளும் இடையிடையே பருகுதல் நெறிமுறையுடையதாம். கல்வியும் வேறு. ஞானமும் வேறு. கவிச்சக்கிரவர்த்தியாகிய கம்பர் "கேட்டுணர் கல்வியோடு ஞானமுங் கிடைந்ததொத்தார்" ஓன்றருளிய தெய்வவாக்கு எய்த நோக்க ஏற்புடைத்தாம். செவிப்புலனால் நுகரத்தகும் இந்து லௌகிக வித்தியாமிர்தங்களும், ஆங்கிலேய வித்தியாமிர்தங்களும் சமயசாஸ்திர ஞானமிர்தங்களோடு கலந்துண்ணப்படுமாயின், அவ்வைதிகமளாவிய ஞானவூண் எம்மையினும் சுகவாழ்வினைப் பயக்கும் நிச்சயப்பொருளாம். ஆங்கிலேய வித்தைகளைத் தெளிவுபெறக் கற்பிக்கும் இந்துபாடசாலைகள் பிரபலமாய் நிலைபெறுகின்றிலவே என்பர் நம்மவருள்ளும் பற்பலர்.

அவ்வாறு நிலைபெறுதல் எதனாற் சித்திக்கும் பொருளினாலன்றோ. அப்பெற்றித்தாயபொருளை, உத்தமகுணங்களெல்லாம் உலோபத்தாலழியுமென்று தெளிந்து மனமுவந்து காலங்கடோறும் வரையறைப்படுத்திச் சிறியதோரளவினதாகவாயினுந் தானஞ்செய்துவரின் இந்துகலாசாலைகள் பிரபலமடையாவோ? தானஞ்செய்யத்தகும் பெருந்தொகைத் திரவியமுடையார் நம்மவருளில்லையென்று சொல்வர் போலும். உலோபகுணத்தினாற் சேர்த்து வைத்துவிட்டுத் தாம்போயொழியுஞ்செயலைவிரதமாக்கொள்வர் ஒருசிலர். விவாகம் முதலியவைகளிலே நியமமின்றி இடம்பநிமித்தம் துர்விநியோகஞ் செய்கின்றார் வேறுபலர். பாணவேடிக்கையின் பொருட்டுங் காமமாகிய விளைபயிரைக் கேழ்த்து எழச்செய்யும் இசையின் பொருட்டுங் கூத்தின்பொருட்டும் போயொழிவன எத்தனை கோடி.

நமது பிள்ளைகளுக்குச் சமயக்கேடும் சாதிக்கேடும் நம்பொருள் கொண்டன்றோ நாம் செய்துவிடுகின்றோம். இந்துக்கள் இந்துகலாசாலையிலேயே வித்தியாப்பியாசஞ் செய்தல் வேண்டுமென, ஒரு யாப்புறவு செய்துகொள்ளின், அது ஒன்றே இந்துமதப் பிரதிட்டையாகும்.

நமது கருணாகரமான அங்கிலேய அரசினர் நீதிக்குடைநிழல் கிடைக்கப்பெற்றும், மதாபிமானமுயற்சியின்றிச் சோம்பிச் சுதந்திரநஷ்டமடையும் நம்மவர்கள் மற்றெஞ்ஞான்றோ மனோதிடத்துடன் முன்னின்று சமயாபிவிருத்திக்கேற்ற சற்கருமங்களைச் செய்து நித்தியானந்தவாழ்வினை உறுதற்கு வல்லராவார்கள். தாபிக்கப்பட்ட இந்து ஆங்கிலேய கலாசாலைகள் இன்னும் பிரபலமுறாமைக்குக் காரணம், சமயாபிமானம், சுதேச க்ஷேமவாஞ்சை, அறிவொற்றுமை, தம்மவர் ஆக்கவிருப்பம் என்னுமிவ்வாபரணங்களை அணிந்து கொள்ளாக் குறையினாற்றான். ஐயோ தஞ்செயலுமற்று, அடிமைகளாய்ப் பரதந்திரப்படும் இயல்பு, தாபிக்கப்பட்டிருக்கும் இந்துகலாசாலைகளைத்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தளர்வுருவண்ணம் தாங்கிவரின் வேருடன் கெட, மேம்பாடுறும் ஆக்கநிலை அதிவிரைவில் வந்தெய்துறுதோ? இந்துமாணவர்கள் இதனை ஒருசிறிது சிந்திக்கின் உண்மைநிலை தெளிவுபெற விளங்கும்.

பல்வாழ்நாளும் பிணிதபுநோன்பும் அறிவுவலியுமுடைய முற்காலத் தெம்மனோர் நெறிமுறைகள் நீடிருந்தாராயற்பாலது.

## புண்ணியதேசசஞ்சாரம்.

பொருட்பொருட்டும் இன்பப்பொருட்டுஞ் செய்யும் யாத்திரைகள் இம்மைநோக்கி நிற்பனவாமாகலின் அவை லௌகிகயாத்திரை எனப்படுவனவாம். அந்தணர் முதலிய நான்கு வருணத்தார்க்கும் மற்றையோர்க்குந் தேசசஞ்சார ஒழுக்கங் கால்நடையினால் யாண்டு உரிமையுடையதேயாம். அங்ஙனமாயினும் அந்தணர்க்கோ புண்ணியபூமிஎனப்படும் பரதகண்டமாத்திரையில் இவ்வொழுக்கஞ் சிறப்புடைத்தாம். ஏனைய மிலேச்சகண்டங்களில் அவ்வொழுக்கம் அவர்க்கு அத்தனைசிறப்பினையுடையதாகாது. ஆகவே, நால்வகை வருணத்தினரும் பிறரும் அந்நால்வகைகளும்பற்றிப் பரதகண்டத்திற் சஞ்சரித்தற்குரியரேயாம். மிலேச்சகண்டசஞ்சாரம் பொருட்பொருட்டன்றி மற்றவைகளின் பொருட்டாகா. அறமும் வீடுபேறுபயக்குமாட்சியும் மிலேச்சகண்டங்களிலே ஒரோவழி உள்ளனவே என்பாருளராயின் நம்மனோர்க்கென நிறுவிய வைதிகச்செந்நெறி பரதகண்டத்திற்போல, யாப்புற அமைவுற்று நின்று நடைபெறுஞ் செய்தியில்லாமை துணிபுற அறியப்படுதலின் அவர்கூற்றுக்கள் இயைபுடையனவாகா. இன்னும் ஆரியமேம்பாட்டினை அடியோடழித்தற்கேதுவாவனவாய் ஆண்டாண்டு அகன்று தொடங்குங்காலொன்று போற்காட்டி மற்றொன்றாய் முடிவுறுவன அளவிறந்தன உளவாவன என்றுமுணர்க. அந்தணர் காலினாலல்லது கலத்தினாற் செலவுமேற்கொளும்உரிமையுடையராகார். கலம் - மரக்கலம்.

## குமணவள்ளல்.

பண்டைக்காலத்திலே தமிழ்நாட்டிலே, தம்புகழ் கொண்டு, மண்மகளைப் போர்வை செய்த வள்ளல்களுள், முடியுடை வேந்தராகிய சேர சோழ பாண்டியரே யன்றி, சிற்றரசர்களும், பிரபுக்களும் எண்ணிறந்தார் இன்றும் புகழுடம்புடன் வாழ்கின்றார்கள்.

கடைச்சங்கமிருந்தகாலத்தே, விளங்கிய வள்ளல்களுட் தலைசிறந்துளோர் பாரி, ஓரி, மலையன், எழினி, பேகன், ஆய், நள்ளி என்னும் எழுவருமேயாவர். இவர்களை ஒப்ப வண்மையுஞ் சீருங் கல்வியுஞ் சிறப்புமுடையராய்ப் புகழப்பட்டார் குமணன், நல்லியக்கோடன் முதலாயினோர்.

“எழுவர் மாய்ந்த பின்றை யழிவரப்
பாடி வருநரும் பிறருங் கூடி
இரந்தோர் அற்றந் தீர்க்கென விரைந்திவண்
உள்ளி வந்தனென் யானே” (புறநானூறு)
எனக் குமணனைக் குறித்தும்

எழுவர் பூண்ட ஈகைச் செந்நுகம்
விரிகடல் வேலி வியலகம் விளங்க
ஒருதான் றாங்கிய உரனுடை நோன்றாள்
ஓவியர் பெருமகன் (சிறுபாண்)

என நல்லியனை நோக்கியும் முன்னை அடிப்பட்ட சான்றோர்கூறுமாற்றானு மஃதறியக்கிடந்ததென்க.

ஒப்புயர்வற்ற திவ்விய சற்குணங்கள் வாய்ந்த பெருமக்களது அரும் பெருங் குணஞ் செயலாதி வைபவங்களின்றிறங்களை இக்காலத்தார்க்கெடுத்து ஒரு சிறிது கூறின், எவரும் நல்வழியிற் செல்லுதற்கேதுவாகும். அன்றியும் அக்காலத்தார்கொண்டிருந்த அருட்பெருங் குணங்களும் வரைவிலாக் கொடையுந் தெய்வபத்தியும் பிறவும் நன்குவிளங்கும். புறநானூறு முதலிய சங்கச்செய்யுளாராய்ச்சியுடையார்க்கிவைகளின் உண்மை நன்குபுலப்படும்.

இனிக் குமணனென்னும் கோமானது குணமிர்தங்கள் எடுத்துப் பாராட்டப்படுகின்றன. பண்டைக்காலத் திலக்கியங்களிலே பயிற்சியுடையார் இக்குமணனை ஒருபோழ்தும் மறந்திரார்.

இக்குமணன் முதிரமலைக் குரிமை பூண்டுள்ளவன். இம் முதிரமலை யாண்டுள்ளது என்று நன்று தெரிந்திலது.

சிலர் கோயம்புத்தூரிலே, அப்பெயருடைய தொருமலை உண்டென்றும், அம் மலைச்சாரலிலே குமணனாடு உள்ளதென்றுங்கொண்டு சிற்சில பதங்களை மரூஉமொழி என நிறுவி, உத்தேச வகையினால் ஒருவாறு கொள்கின்றார்கள். அக்கொள்கைக் காதாரங் காணப்பட்டிலது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இனி இக் குமணனைக் குறித்து எழுந்த செய்யுள்களிலே இவன் சரித்திரம் முற்றும் பெறப்பட்டிலது. ஆயினும் அவை அவனது உதார குணத்தை நன்கு எடுத்து விளக்குவன. இவனைப் பாடிய புலவர்கள், பெருஞ்சித்திரனார், பெருந்தலைச்சாத்தனார் என விவ்விருவர். பெருஞ்சித்திரனார், கடைவள்ளல் எழுவருள் ஒருவனாகிய அதிகமான் நெடுமானஞ்சியையும், பெருந்தலைச்சாத்தனார், அக்கடைவள்ளலார் காலத்து விளங்கிய இளவிசிக்கோ இளங்கண்டீரக்கோ என்பவரையும், தனித்தனி பாடியிருக்கின்றனர். அவ்விரு புலவர்களாலும் பாடப்பெற்ற குமணன், கடைவள்ளலார் காலத்தும் அவர்க்குப் பின்னும் இருந்தவனென்பதும், பிற்காலத்தவனல்லன் என்பதும் நன்கு விளங்கும்.

பெருஞ்சித்திரனார் என்னும் புலவர்பெருமான், வெளிமான் என்பவனிடம் பரிசிற்பேறு கருதிச் சென்றபொழுது, அவ்வெளிமான் தன் தம்பியாலொரு சிறிது கொடுத்து விடுப்ப, புலவர் வெறுப்புற்றுக் குமணன்பாற் பரிசில் பெறுவான் வந்தனரென்றும், வந்தாற்குக் குமணன் யானைகளும் வேண்டியன பிறவும் நல்கிப் பெருவரிசை செய்து விடுத்தனரென்பதும், பெற்ற அச் சிறப்புக்களுடனே, தம்மை ஒருபொருட்படுத்தாத வெளிமானிடஞ் சென்றனரென்பதும் சென்று வெளிமானை நோக்கி

இரவலர் புரவல நீயும் அல்லை
புரவலர் இரவலர்க்கு இல்லையு மல்லர்
இரவலர் உண்மையுங் காண்; இனி இரவலர்க்கு
ஈவோர் உண்மையுங்காண; இனி நின்னூர்க்
கடிமரம் வருந்தத் தந்து யாம் பிணித்த
நெடுநல் யானை எம்பரிசில்
கடுமான் தோன்றல் செல்வல் யானே

என்னும் பாடலைக் கூறிக் குமணனது கொடையினருமையினைப் பாராட்டினரென்பதும் பிறவும் புறப்பாட்டால் உணரத்தக்கனவாகும்.

இவைகளாற் குமணன் புலவர்பாடும் புகழும் கொடையும் அருளும் உடையோனாய் விளங்கியவன் என்பது ஒருவாறு தெளியப்பட்டது.

இக் குமணனை, தமிழ்க்கலா விநோதனாய்த் தமிழ்நாவலர்க்குப் பொன்மழை பொழிந்ததொரு மேகம் என்றே அறிதல் வேண்டும். இவன் காலம் ஒருவாறு நிச்சயஞ்செய்யின் ஆயிரத்தொரு நூறு வருடங்களுக்கு முன்னுள்ளவன் என்பதிலொரு சிறிதுமையமில்லை.

வரும்.

---

## சைவபோதம்.

வேதாகமங்களின் மெய்ம்மையாகிய பொருட்டிறங்களை முட்டின்றி எடுத்தறிவிக்கும் நமது சைவ சமயமே, சமயாதீத அருட்பெருஞ் சமயமாம். இஃது பரமாத்மாவாகிய பரமசிவன், சகள நிஷ்களத் திருமேனி கொண்டருளி, சதாசிவமூர்த்தியாய் நின்று அநந்த தேவர்க்கருளிச் செய்த சன்மார்க்கம்.

ஆளுடைப்பிள்ளையார் வாகீசர் நம்பியாரூரர் வாதவூரடிகள் எனும் பரமாசாரியசுவாமிகள் நால்வரும் தென்னாட்டிலே, திருவவதாரஞ்செய்து திருவருட்பெருஞ் செல்வர்களாய்ச் சைவ சமயப் பிரதிட்டை திருவருண் முறையாற் செய்தருளினார்கள். அந்நால்வர்களே யன்றிப் பத்தவிலாசத்திற் கூறப்பட்டுள்ள தில்லைவாழந்தணர்முதலிய உண்மைநாயன்மார்களும் இச்சைவச்செந்நெறியே போற்றியனுட்டித்துத்திருவருள்விலாசம் உலகிலேநிலையிட்டருளினார். இன்னும் சைவஞானேந்திரர்களாகிய திருமாளிகைத்தேவர் முதலிய ஒன்பதின்மராகிய நாயன்மார்களும் பட்டணத்தடிகளும், திருக்கைலாசபரம்பரைச் சந்தான சிவாசாரியர்களும், யாழ்ப்பாணம் ஸ்ரீலஸ்ரீ. ஆறுமுகநாவலரவர்களும் இச்சைவத்திருவருண்முறை போற்றி நிறுவியருளினார்கள். இறுதியிற்கூறப்பட்டுள்ள நாவலர்பெருமானெனப்படும் மகானுபாவர் அவதாரஞ்செய்து காவாதொழிவராயின் யாழ்ப்பாணமெனப்படும் மங்கையானவள் புறமதத்தினர் கைப்பட்டுப் பெறற்கருங்கற்புநிலைதவற அவள் புதல்வராகிய நாமெல்லாம் நாணூற்பிணிப்புண்டு வாயடங்கிஇருத்தல்வேண்டுமென்பதைச் சிந்தித்து அப்புண்ணியபுருஷனை ஒருபோதும் மறவாதிருத்தல் நம் கடப்பாடாகும்.

இச்சமயம் மகாசிருட்டிதொடங்கி இன்றுகாறும் இங்ஙனம் உபதேசமுறையினால் அடிப்பட்டு இந்நிலைவரைப்பிற்கோர் மலைவிளக்காய் செஞ்சுடர் வீசாநிற்கின்றது. இச்சைவம் அகம், அகப்புறம், புறம், புறப்புறம் என்னும் நாலாறு சமயங்களும், தன்னையடையும் மேலாறுகளாகக் கொண்டு சமயாதீத ஞானராசபீடமாய்ப் பேரொளியுடன் நிலவுகின்றது. விட்டுணுவாதிதேவர்கள், அகத்தியர் முதலிய முனீந்திரர்கள், சித்தர்கள், மனுமுதலிய முடியுடைவேந்தர்கள், இன்னும் அளவிலாப்பெரியோர்கள் யாரும், கண்ணகன்ஞாலம் கரங்குவித்தேத்த, இச்சைவமார்க்கவழிநின்றேநாவினாற்புகழ்தற்கெட்டாச் சித்திமுத்திகளை அடைந்தாரென்று புராணேதிகாசங்களெல்லாம் எடுத்துப் பிரதிபாதித்து உறுதியுற அறுதியிடுகின்றன.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இங்ஙனம் மண்ணகத்திஞர்க்கும் விண்ணகத்திஞர்க்கும் இச்சைவமார்க்கம் இகபர வீடுபேற்றின்ப வாழ்வுகளெல்லாம் வேண்டியவாறே சந்தான கற்பகம்போல அருளித் தாயகமாய் நிலவும் சன்மார்க்கமாகும்.

ஆதலால் நம்மவர் அனைவரும் அதனை எடுத்துப் போதிக்கும் வேதாகமங்களையும் வடமொழி தென்மொழி வடிவுபெற்று நிற்கும் மெய்நூல்கள் பிறவற்றையும் மனவிருப்புடன் கல்லாமையாலும் கற்பார் சிலருளராயினும் பிறர்க்குக் கற்பித்தலும் பண்டிதபாமரர்களாகிய யாரும் எளிதிற் கேட்டுணர்ந்துய்வுறத் தெளிவாகப் பிரசங்கித்தல் செய்தலுமின்மையாலும் இதனைச் சிலர் ஞேபாயம் இல்லை என்று எண்ணுமதனாலும் இக்காலத்திலே அதன் விளக்கம் வரவரப் படிமுறையானே குன்றிவருவதாகின்றது.

ஆகலிற் சைவ சமயபானுவின் பெரிய ஞானப்பிரகாசத்துள் தோன்றாது அடங்கி வலிகுன்றி ஒடுங்கிக்கிடந்த பரசமயங்கள் இது ஒருவாறு பிரகாசங்குன்றும் இச்சமயம் பார்த்துத் தலையெடுப்புடன் வெளிவந்து தத்தந் தோற்றம் காட்டுவனவுமாயின.

இக்காலத்தினேர்கள் பலர் தமிழ்க் கல்வியும் சமயநூலுணர்ச்சியுமின்றி ஆங்கிலேய வித்தியாப்பியாசஞ்செய்யப்புகுந்து அதனைத்தானும் முற்றுற ஒருவாறு கடைபோகவாயினுங் கற்றலின்றி ஒரு சிறிது கற்றமாத்திரையானே வித்தியாசாலாப்பியாசம்விட்டுத் தம்நிலைக்கும் கல்வியறிவிற்கு மியைந்தவொரு உத்தியோகத்தினை ஆய்ந்து தெரிவுசெய்துகொண்டு அதற்கு வேண்டுவனவற்றை மாத்திரம் அதற்குரியார்பாற் சிறிதுகாலம் பயிற்சிசெய்து பின் குறித்த அவ்வுத்தியோகத்தமர்ந்து சமயாசாரங்களை வேண்டாது தங்காலங் கழித்து வருகின்றார்கள்.

இவர்களது உத்தியோக நிலையினைச் சிந்தித்துச் சபைகள் கூடுங்காலிவர்க்கு அழைப்புப்பத்திரம் விடுத்தழைத்து விடுப்ப, அக்கிராசனதிபதியவர்களால் இவர்கள் பிரசங்கஞ்செய்யும் வண்ணம் கேட்கப்படுகின்றார்கள். அக்காலத்திவர் யாது செய்வர். ஆங்கிலேய பாஷையையாயினும் கடைபோக நன்கு கல்லாமையாலும் சுயபாஷையாகிய தமிழறிவும் சமயநூலுணர்ச்சியும் ஒருசிறிதுமில்லாமையாலும் வாய்கட்டப்பட்டுப் பெருந்துன்புழக்கின்றார்கள். உத்தியோகநிலையடைந்தபின் தமிழாராய்ச்சியுடையராய்ச் சமயநூல்களைக் கற்றுவரின் எத்துணைப் பேரின்ப நலம் பயக்கும். தாம் வசிக்கும் நாடுகளில் தமிழ்க் கல்விப் பயிற்சிக்கேலாமை காண்பாராயின் ஆங்கிலேயபாஷைகளிலே மொழிபெயர்க்கப்பட்டுள்ள சைவசித்தாந்த நூல்களையாயினும் வாசித்து எஞ்சிய காலங் கழித்துவரின் நாமெல்லாம் மேனிலையுறுதற் கருகராவமன்றே.

அன்றியும் ஆங்கிலேய பாஷையிலே சென்னையிலே புத்தக ரூபமாக மாதாந்தம் வெளிவரும் "சித்தாந்த தீபிகை" யாழ்ப்பாணம் வண்ணை மாநகரிலே செந்தமிழ்மொழியிலே மாதமிருமுறை வெளிவரும் "ஞானசித்தி" என்னும் பத்திரிகைகளை வாங்கி வாசித்துவரின் அவை வாயிலாகவும் சமயநூலுணர்ச்சிவந்துறுமென்பதிலையமில்லை.

சைவசித்தாந்த சமய வுண்மைகளை ஐயந்திரிபறத் தருக்கவாயில்களாக விளக்கிப் பிரசங்கஞ்செய்வதிலும் எழுதுவதிலும் கசடறக்கற்ற கல்வியாற்றல் படைத்த ஞானசித்திப் பத்திராதிபர் ஸ்ரீமாந். சி. தாமோதரம்பிள்ளை அவர்களுக்கும் அரும் பெரும் சைவசித்தாந்த உண்மைகளை ஆங்கிலேய மொழியிலே சொற்பஞ்சமின்றி அவைகட்கியைந்த பதங்களைத் தந்து பெயர்த்துரைக்கும் கல்வியின் நல்வளம் கவினுறமேவும் சித்தாந்ததீபிகைப்பத்திராதிபர் பிரமஸ்ரீ. வி. வி. ரமணையர் அவர்களுக்கும் இத்தமிழுலகம் மிகவும் கடமைப்பட்டு, பரோபகாரமாய் அப்பத்திராதிபர்கள் இருவருஞ் செய்துவரும் வித்தியாதான தருமத்தை ஒருபோதும் மறவாது பாராட்ட வேண்டுமென்பது சர்வசம்மதமேயாம்.

இன்னுஞ் சித்தாந்த தீபிகையிலே மொழிபெயர்க்கப்பட்டனவும்படுவனவுமாகிய சைவசித்தாந்த சமய நூல்கள் இவை இவை எனத் தனித்தனி அவற்றின் வரலாறுகளுடன் எழுதப்பட்டுமிருக்கின்றன. ஆதலாற் சித்தாந்ததீபிகை, ஞானசித்தி ஆகிய இரு பத்திரிகைகளும் சைவசித்தாந்த நூலுணர்ச்சியினை உளங்கொள உபதேசிக்கும் ஞானசாரியர்களாம்.

ஆகவே நம்மனோரை நாம் வேண்டிக்கொள்வது உத்தியோககால மொழிந்த காலம் சமயநூலாராய்ச்சியிற் கழிக்கப்படவேண்டுமென்பதேயாம். மற்றைய சாதியினேர்க்கு நமது சமயக்கொள்கைகளைப் புகட்டுதற்குப் பிரவேசவகுப்பினேர்க்கமைத்த முதற்பாடங்கள்போலச் சிற்சில விஷயங்களை வேண்டுமிடங்கடோறுந் தந்து ஸ்ரீ. விவேகாநந்தசுவாமிகள் முதலிய நுண்ணறிவினரால் வடமொழியினின்றும் ஆங்கிலத்தில் மொழிபெயர்க்கப்பட்ட சிற்சில நூல்களை மாத்திரம் வாசித்துத் தாம் வேதாந்தியென்று கூறி மதுவுண்ணினும் மாமிசபோசனஞ் செய்யினும் அவையெல்லாம் பாபச்செயல்களாகா என்றும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பின் ஆன்மா சாட்சிமாத்திரையேயாம் என்றும் எண்ணி இந்துசமயமென வேறு பெயருமிட்டு இதுவே நமது சைவசமயக் கொள்கைகளென்று நிச்சயித்தும்விடுகின்றார்கள். இதனால் வேதாந்த தூஷணஞ்செய்யப்பட்டதன்று. பின் அதனுண்மையினையும் அவ்வாசிரியர்களதுஆழ்ந்த நுண்ணறிவிற் புதைந்துகிடந்த அவர் கொள்கைகளையு முய்த்துணருமாற்றலின்றி ஒன்றை மற்றொன்றாய்த் திரித் துணர்ந்துவிடுகின்றார்கள் எனக் காட்டப்புகுந்த அத் துணையேயாம்.

இன்னும் **சித்தாந்ததீபிகை, ஞானசித்தி** முதலிய மேற்காட்டிய சைவசித்தாந்தப்பத்திரிகைகளையும் சைவசித்தாந்த நூல்களையும் நல்லாசிரியர்வாயிலாகக் கற்றறிந்தபின் வேதாந்த சாத்திரங்களைக் கற்றுணரின் உண்மைநிலையும் அவற்றின் தாரதம்மியங்களும் அவர்க்கு நன்கு புலப்படும். திரிபுணர்ச்சியும் புகுதற் கிடம்பெறாவாம்.

வரும்.

# தொல்லாசிரியர் செய்யுளழகு.

பண்டைக்காலத்தாசிரியர்கள் உலகவியல்பினை இனிதறிந்துபாடும்தெய்வீகவியல்புடையவர். அவர் விளக்கிய அழகின் திறங்களைச் சுருக்கிக் காட்டுகின்றாம்.

கட்டழகு முதிர்ந்ததோ ரரசன் மனைவி தான் மேற்போர்த்திருந்த நீலப்பட்டாடையினைச் சிறிது சிறிதாக நீக்கிச் சுருட்டிக் கீழ்நிலத் தெறிந்துவிட்டு உறக்கம்நீத்து ஒளிவளரும் நளிர்முகங்காட்டி எழுமாபோல இருட்கூட்டம் திரண்டு நிறங்குன்றிக் கடலிடத்தேசென்று ஒடுங்குமாறு இளஞாயிறு உருக்கித் திரட்டிய பசும்பொனுண்டைபோலக் கீழ்த்திசையிலே உதிக்கவும் அத்திசையினிடமெல்லாம் பொன்னுரைத்துவிட்ட உரைகற்போலச் சுவர்ணரேகைகளின் வரிசைகள் அணியுடன் பொலிந்து ஒளி வீசவும் பசுமை பொன்மை நீன்மை வெண்மை செம்மைமுதலிய பல்வேறுவகையினவாகிய உலோக பேதங்கள் உருகிக் கிளைகொண்டு பாய்ந்தோடப்பெறுமொரு பூமியினிடம்போல வானினிடமெங்கணும் வர்ணபேதங்கள் பரவி ஒளிர்வுறவும் கரிய முகிற்குழாங்கள் செவ்வரக்குப்பூசி வழித்ததோர் எழினியின் றன்மைபோலவும் வெளிய மேகங்கள் பொற்படாம் போலவும் அங்கங்கே எடுத்துரைத்தற்காகாப் பேரொளிப் பரப்புடன் நின்றுமிளிரவும் உலகமாமாரணங்கு உள்ளுற நகைக்குமாறுபோல இப் புத்தழகுகள் தோன்றும் புலரிக்காலமாகிய விடியற்காலத்து இவ்வியற்கையழகு தன் மனதிலெழுதப்பட மீனெறிகருவி தன்கையில் விரிந்துகிடப்பக் கடற்கரையில் இவற்றைநோக்கிநிற்கும் வலைஞனிற் சிறந்துள்ள மனனுணர்வுடைய புலவன் யார் என்பதையும் நோக்குக.

விடிந்தபின் முல்லைநிலமாக்களாகிய கோவலர்கள் பசுவின் கன்றுகளைக் கயிற்றினாற் பிணித்துவைத்து ஆனிரைகளை அயலின்கணுள்ள மலைச்சாரலின்கட் கொண்டுசென்று பசும்புற்றரையில் மேய்வுற விடுத்துத் தாம் கொன்றைமாநீழலிலே சாய்ந்திருந்து தம்மெதிரே பச்சிலைப்போர்வைகொண்டு பன்னெடு மேகமெல்லாம் நெற்றியிற் றழுவிச் சூழ்ந்து தாழ்ந்துதாங் கிடப்ப அளத்தற்காகாப் பெருமையுடன் விண்ணினை அளாவித் தோன்றும் மலையினை நிமிர்ந்துபார்க்கும் தொழில் நிகழும் பொழுது அவர்கள்பால் தோன்றும் அச்சமும் மகிழ்ச்சியும் பிறவும் நோக்கற்பாலனவாம்.

காதற்பிணியாற் கட்டுண்ட தலைவனுந் தலைவியும் நெகிழ்ந்திடாத அன்பின் மிகுதியினால் தோளொடு தோள் தழுவ மலையின் சாரலிலே பூஞ்சோலைகளிலே களிப்பின் மதர்ப்பினோடு உலாவி வருந்தோறும் தூக்கணங்குரீயினங்கள் மரக்கொம்பர்களிலே வைசித்திரியாலங்காரங்கள் கண்கவரக் கட்டுங் கூடுகளையும் மரங்களினிடையே உள்வைரம் அறக் கோதி எடுத்தமைக்கப்பட மாளிகைகளிலே புறவினங்கள் செறிந்திருந்து எழுதலையும் மயிலினங்கள் பொற்கண்ணுறும் பசுந்தோகையை விரித்து நின்றகவுதலையும் மலையருவிகள் மலையினுச்சியினின்றும் கற்படைகளின்மேற் றிரள் றிரளாக வீழ்ந்து ஓடி அச்சோலையின் பக்கங்களிலுள்ள ஆழமாகிய நீர்நிலைகளிலே நிரம்பித் ததும்பச் செந்தாமரை முகிழ்கள் இலைகளின்மேல் இதழ்களை விரித்துச் செந்நிறங்கொண்டு அலர்தலையும் கண்ணுற்று நறிய நாண்மலர்களை மரங்களிலேறிப் பறித்து மயிர்க்கற்றைகளிலே மாறி மாறி அணிந்தும் அவர்கள் பூம்பொழில் நுகருங்காற் றோன்றும் அழகும் நோக்கற்பாலது

இங்ஙனமாக நம்முணர்வைத் தம்வயப்படுத்தும் பேரழகுகள் உலகவியற்கையி லெங்கெங்கு காணப்படுமோ அங்கங்கெல்லாம் தொல்லாசிரியர்களது மனனுணர்வும்சென்றுகவர்ந்து. மனதிற்சிந்தித்துப் பாவகஞ் செய்துகொண்டபடியே படத்திலெழுதும் கைவலோன்போலச் செய்யுளிலமைத்துக் காட்டும் அவ்வாசிரியர்களதியல்பு போற்றப்படற்பாலது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உலகவியற்கையினழகை நம்முள்ளத்திற் பொருந்தக்காட்டி உணர்வை விரிக்கும் சொற்களின்தொகுதிமயமாகிய செய்யுள்கள் எழுதப்படுகின்ற உருவினையுடைய நூலப்பொருள்களாம்.

உலக வியற்கையி னழகுடன் ஒற்றுமைப்பட்டுக் கண்முதலிய பொறிவழிப் புகுந்து உணர்வு மிகுதியினை வருவிப்பதாய்ச் செய்யுட்களிலே அமைந்து கிடப்பதாய் அவ்வாசிரியர்களுடைய நுண்ணுணர்விற்குக் காரணமாயுள்ளதெது அது சூக்குமமெனப் படுமென் றுணர்க.

நம் வாணாளிலே நாடோறும் நமது நினைவுகளெல்லாம் உணவு தேடுதலினும் பொருட்குவை தொகுப்பதினும் மனை மக்கட்காவன தேடிக் கொடுத்தலினும் பிறரிட்ட ஏவல் வழியே நின்றுழல்தலினுமாக இவ்வாறு பலவாறு சிதறுண்டு அருமை பெருமைகள் ஒழிந்து பயனின்றி அவலமாய்க் கழிகின்றன. கூறியாங்குக் கழிந்தொழியும் மக்களது நினைவுகளும் பிறவும் உலகினர்க் கெப்பயனையுந் தாராவாகலின் அவையெல்லாம் அறியப்படவேண்டும் என்று அவாவுறுவார் யாருமில்லை.

இனி மேற்காட்டியவண்ணம் கழியும் நாட்களிலே ஓரோர் சமயங்களிலே அவாறிவு அவலத்துறும் கதிகளினின்றும் பிரிந்து வேறுற நின்று உலகவியற்கையழகிற் பொருந்தி அதன் வண்ணமாய்த் திரிந்து தெளிவுறுங்கால் அநுபவத்தோடொட்டிச் சுரப்புற்றுப் பெருகும் அரிய கருத்துவகைகள் தாம் அறிவுடையோரால் அவாவுறும் பண்பினவாகும் என்க.

இங்ஙனம் தெளிய வடித்துக்கொண்ட ஆசிரியர்களது கருத்துக்களின் கோவைகள் அணிபெறக் கிடக்கப்பெறுவன அவர் செய்த செய்யுள்கள் என்றுணர்க.

மக்களது வாழ்நாளெனப்படும் நீர்நிலையிலே அவல நினைவுகளெனப்படும் கலங்கல் நீர் பெருகிச் செல்லும்பொழுது உலக இயல்பு எனப்படுங் குகைகளில் அரித்து வந்த அருங்கருத்துகளெனப் படும் பொற்பொடிகள் இடையிடை ஆழ்ந்து அடிநிலத்திற் சிதர்ந்து மின்னொளி வீசிக்கிடப்ப நல்லிசைப் புலவர்களாகிய அரிக்குந் தொழிலாளர்கள் மிக வருந்தி முயன்று துருவி அவற்றையெல்லாம் ஒன்றுபடச் சேர்த்தெடுத்துத் தன் மதிநுட்பமெனப் படும் அக்கினியிலிட்டு உருக்கிப் பசும்பொற்பிண்டமாகத் திரட்டி நம்மனோர்க்கு நல்குதற் கிடமாய் நிற்பதும் அச்செய்யுள் என்றறிதல் வேண்டும்.

மக்கள் மனமாகிய அரிய அமிழ்தம் வழுக்களுடன் விரவித் தன்னியல்பு குன்றிவிடுதலும் நல்லிசைப்புலவன் தனது பேரறிவென்னும் தேற்றினாலே தேற்றி வடித்து இன்சுவையினை மிகும்படி செய்ய, நாமெலாம் பருகிப் பெரியதோர் களிகூர்தற்கிடமாய் நிற்பதும் செய்யுள்களென்றுணர்க.

ஆங்கிலேய மொழியிலே நல்லிசைப்புலமைபூண்ட "மில்டன்" என்னு மாசிரியர் பாட்டென்பது மக்கள் மன வறிவின்சாரமாய் இறக்கப்பட்ட பரிசுத்தமான அமிழ்தம் (**Areopagitica**) என்று கூறிய திவ்விய வாக்கினருமை ஈண்டு நோக்கற்பாலது.

உலக இயற்கையழகுடன் பெரிதும் பொருந்தப் பாடும் நல்லிசைப் புலவனுக்கும், உலகயியற்கையினழகு தோன்றப் பலவகை வண்ணங்களாற் சித்திரித்துக்காட்டும் ஓவியத்தொழிலினுக்கும், நுணுகி நோக்குங்கால் ஒற்றுமை மிகவும் உண்டாமென்பது இனி ஒருவாறு காட்டப்படும்.

வரும்.

## தமிழ்வசனநடை.

### இராமாயணம்.

உழக்குமறைநாலினுமுயர்ந்துலகமோதும்
வழக்கினுமதிக்கவினினும்மரபினாடி
நிழற்பொலிகணிச்சிமணிநெற்றியுமிழ்செங்கண்
தழற்புரைசுடர்க்கடவுடந்ததமிழ்தந்தான்.

எப்பொருட்குமிறைவாகிய சிவபெருமானே நமது தமிழ்ப்பாஷையை அருளிய கர்த்தாவாகும். இது அந்நியபாஷைகளின் சார்பும் உதவியும் வேண்டாது தனக்குரிய சப்தத்தோடு வழங்கும் பெருமை வாய்ந்துளது. வடமொழியிலே முற்காலத்திருந்த வியாகரணநூல்களை எல்லாம் ஆராய்ந்து தெளிந்து சிவாநுக்கிரகத்தினாலே அவைகளெவற்றினுஞ் சிறப்புற்று நிலவுதாமொரு வியாகரண மியற்றிவைத்த ஆசிரியர் பாணினியார் போல அருந்தவக்கொள்கை அகத்தியனாரும் முற்காலத்துள்ள இலக்கணநூல்களை எல்லாம் ஆய்ந்து தெளிவுற்றுச் சிவாநுக்கிரகத்தினால் அவைகளெவற்றினுஞ்சிறப்புற வடமொழிவியாகரணமுடிபுகளை ஒப்ப நோக்கி வேண்டுவனவற்றை இடங்கடோறும் நாட்டித் தாமோர் இலக்கணநூல் செய்தருளினார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எத்துணைக்கல்வியாற்றல் படைத்துளரேயாயினும் ஒருவரால் ஒரேகாலத்தில் புதிதாக இயற்றப்படற்குரியனவல்லவாகலின், தமிழிலக்கணங்களை எல்லாம் புதிதாய் ஒருவரே இயற்றினர் என்று கோடல் பொருத்தமுடையதுமன்று. இதுபற்றியே நுண்ணறிவினையுடைய நூலாசிரியர் கம்பர் "நீண்டதமிழாலுலகைநேமியினளந்தான்" என்று ஆசிரியர் அகத்தியனாரை விசேடித்ததூஉமாம்.

இனி இத்தமிழ்ப்பாஷையானது அநேகமாயிர வருஷங்கள்முன்றொட்டு, இந்தியாவின் தென்பாகத்திலே வழங்கிவருகின்றது. தமிழ் என்னுந் தனிமொழி இனிமைப்பொருள் குறித்துநிற்கும். அது "இனிமையும் நீர்மையும் தமிழெனலாகும்" என வரும் பிங்கலந்தைச் சூத்திரத்தினாலும் "சங்கத்தமிழினுமினியாள்" எனவரும் இராமாயணச் செய்புளாலும் "தமிழ் தழியசாயலவர்" என்னும் சிந்தாமணிச்செய்யுளுக்கு ஆசிரியர் நச்சினார்க்கினியர் உரைத்த உரையினாலும் பெறப்படும்.

இதுநிற்க ஆங்கிலேயபாஷையிலே நூல்கள் எவ்வளவு விரிவுபெறச் செய்யப்படுகின்றனவோ அவ்வளவு விசேடமுடையதாகக் கொள்ளப்படும். தமிழிலோ அங்ஙனமன்று. பின் சொற்சுருக்கத்துடன் திட்பமுடையதாய்ச் செய்யப்படுவதே விசிட்டமுடையதாகக் கொள்ளப்படும்.

முற்காலத்திலே தமிழிலே நூல்கள் எல்லாம் செய்யுள் வடிவிலே இயற்றப்பட்டன. அக்காலத்திலே ஒருவர்க்கொருவர் எழுதிவிடுக்கும் விண்ணப்பங்கள் கடிதங்கள் தாமும் செய்யுள்வடிவே பெற்றிருக்கும். வசனவடிவை நூலினுரைகளினன்றி வேறெங்கும் காணுதல் அரிது. உரைகளுள்ளும் பெரும்பாலன செய்யுள் நயம்பெற்று நடப்பன. அவைகளுள்ளே வேண்டுஞ் சிறப்புக்களெல்லாம் ஒருங்கெய்திநின்று பாராட்டப்படுவன சேனாவரையரும், பரிமேலழகரும் இயற்றிய உரைநடைகளேயாம்.

இவர்கள்பின் அகத்தியர் வரத்திற்றோன்றித் திருவாவடுதுறை ஆதீனத்தை அடைந்து சைவசமயநூல்களையும் உரைகளையும் நுணுகிக்கிடந்த அரிய இலக்கணநுட்பங்களையும் எடுத்தறிவுறுத்தித் தமிழ்ப்பாஷாபிவிருத்தி காரணமாக மீட்டுமொருகாற்றோன்றிய அகத்தியனார்போன்று, இன்றும் மாயாவுடம்பு கொண்டுள்ள சிவஞானசுவாமிகளே ஆதியிலே வசனநடையிலே நூல்கள் இயற்ற ஆரம்பித்தருளியவர்.

அதன்பின் சாத்திர விஷயங்களாகவேனும் அன்றி லௌகிக விஷயங்களாகவேனும் எவ்வகையினரும் நன்கு தெளிவுபெறத் தமிழிலே இனிய நடையிலே வசனநூல்களை இயற்றியவர்கள், ஈழநாட்டிலே யாழ்ப்பாணத்திலே நல்லூரிலே அவதாரஞ்செய்த ஸ்ரீலஸ்ரீ. ஆறுமுகநாவலரவர்களேயாம். குற்றங்களைந்து சொற்களை ஆய்ந்து எடுத்துக்கொண்டவிஷயத்திற்கேற்ப வசனநடை எழுதும்பெருவரம்படைத்துளார் இம்மகாநுபாவர் ஒருவரேயாம்.

தொல்காப்பியத்திற்கு ஆதியிலே உரைசெய்தமையின் இளம்பூரணர் உரையாசிரியர் எனப்பட்டமைபோல, வசனநடையிலே நூல்கள் எழுதத்தொடங்கியவர்கள் இவர்களேயாதலின் ஸ்ரீலஸ்ரீ. ஆறுமுகநாவலரவர்களும் "தமிழ்வசனஆசிரியர்" என்று ஒருசிறப்புப்பெயர்கொண்டு உலகினராற் போற்றப்படுவாராயினர்கள்.

அவர்கள் எழுதும் அரிய வசனநடையின் இன்சுவை நுகர்தற்கு, சுவை கனிந்தொழுக, வேண்டுமிலக்கணங்களெல்லாம் விரவிக்கிடப்ப, அவர்களால் எழுதப்பட்ட "பெரியபுராணவசனம்" ஒன்றே அமையும். ஆதலின் இவர்கள் எழுதும் வசனநடையினருமைகளும் பூராஷாகதிகளும் பிறவும் பின்னர்க் காட்டுகின்றாம்.

இது நிற்க முற்காலத்திலே தமிழ் தேசபாஷையாயும் அரசபாஷையாயுமிருந்தது. அக்காலத்துள்ளவர்களது மனநிலையும் எண்ணங்களும் நாம் இப்பொழுது கொண்டிருப்பனவற்றோடு ஒத்துநடக்கும் இயல்புடையனவாகமாட்டா. நாம் பேசுந்தமிழ்நடையும் எழுதுந்தமிழ்நடையும் கற்கப்படும் நூல்களின் தமிழ்நடையும் ஒற்றுமைப்பட்டு நடக்குங்கதிகளை உடையனவல்ல. தமிழ்நாட்டினை அரசுபுரிந்த வேற்றரசர்களது பாஷையின் பதங்கள் அளவிறந்தன பேசப்படுந் தமிழ்நடையிலே வந்து நுழைந்து நுழைந்து காலக்கிரமமாக கலந்து நடப்பனவுமாயின.

இவ்வாறு பேசப்படும் நடையிலே வந்து கலந்த இவ்வந்நியபாஷாபதங்கள் தமிழ்நூல்களிலே காணப்படமாட்டா. இப்பதக்கலப்பு வந்துறுமுன், தமிழ்ப்பாஷை எந்நிலையிலிருந்ததோ அந்நிலையிற்றோன் இலக்கியங்களினுங் காணப்படும். அக்கால இலக்கிய வழக்கிற் காணப்பட்ட "உணர்த்துமாயிட்டு, போகட்டு, பாடிகாவல், நிம்பிரி," என்னும் பதங்கள் இக்கால வழக்கிலின்றி ஒழிந்துபோயின. ஆகலின் சங்கநூல்கள் இக்காலத்தாருக்கு வேறொரு பாஷைநூல்கள்போற் றோன்றுகின்றன.

இன்னுமக்காலத்து வழங்கிய வியாபாரத்திற்குரியபதங்கள், "துருக்கர்" காலத்திற்றானே மாற்றமடைந்துவிட்டன.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காலக்கிரமமாக உலகினர் மனோபாவங்கள் வேறுபாடுறுந்தன்மையுடையன. ஆகவே அவர்கள் பேசும்பாஷாகதிகளும் வேற்றுமையுடையதாகிப்பழையநிலையினின்றும் மாறிவிடும் என்று ஆங்கிலேயபண்டிதர்கள் கொண்டகொள்கை அநுபவத்தோடொட்டி நோக்கின் உண்மையேயாம்.

மனிதர்களுக்கு மனோபாவங்கள் காலங்கடோறும் வேறுபடுதற்குக் காரணம் அவ்வக்காலங்களிலே தலையெடுத்து நிலவும் அன்னியபாஷைகளின் சம்பந்தங்களேயாம். அவைகள் ஏதுவாக மனநிலையும் எண்ணங்களும் கருத்துவகைகளும் புதிது புதிதாகத்தோன்றுகின்றன.

இவ்வாறு அந்நிய பாஷாசம்பந்தங் காரணமாக எழும் மனோபாவங்களை அப்பாஷையிற்கண்டவாறே பிறர்க்கெடுத்து விளக்கத் தன்பாஷையிலே பதங்கள் பெறப்படுகின்றில. பெறினும் கேட்பார்க்கினிமை பயக்கத் தாம் கற்றுணர்ந்த அந்நிய பாஷையிற் கண்டவாறுபோல இயைபுடையதொரு பதத்தினால் வெளிப்படுத்த முயலுங்காற் சொற்பஞ்சமுற்று, எப்பாஷையிலிருந்து அப்பாவங்கள் கிரகிக்கப்பட்டனவோ, அப்பாஷையினின்றும் அப்பாவங்களைக்குறிக்கும் பதங்களைச் சுயபாஷையினுள்ளே கொண்டுவந்து நுழைக்கின்றார்கள்.

இங்ஙனம் அந்நிய பாஷாபதங்கள் வந்துகலப்புறவே சுயபாஷாகதியின் இயற்கைநலம் கெட்டொழிகின்றது. ஒழியவே தொல்லாசிரியர்கள் நடை ஒன்று, இவர்கள்பேசும் பாஷாநடையுமொன்றாகி வேற்றுமை பெரிதுமுளதாகின்றது. இந்நெறியினால் பேசும் பாஷையானது காலபேதங்களையும் அக்காலங்கடோறுமுள்ள மனோபாவங்களையும் ஒட்டிப் புதியதொரு கதிகொண்டு வழங்கும் இயல்புடையதாகின்றது. ஆகவே பேசப்படும் தமிழ்ப்பாஷாநடை இவ்வழியினாற் பேதமுற்றதேயன்றி, கற்கப்படும் தமிழ்நூல்களின்நடை ஆசிரியர் ஆணைநெறி பிறழ்ந்து செல்லாச் சிறப்பு இன்னும் வாய்ந்துளது.

வரும்.

# வைத்தியவிசாரம்.

## மச்சையாதி தாதுப்பிரமாணம்.

சரீரத்திலே மச்சை ஒரு அஞ்சலிப்பிரமாணம். மேதை இரண்டு அஞ்சலிப்பிரமாணம். வசை மூன்றஞ்சலிப்பிரமாணம். மூத்திரம் நான்கஞ்சலிப்பிரமாணம். பித்தம் ஐந்தஞ்சலிப்பிரமாணம். கபம் ஆறஞ்சலிப்பிரமாணம். மலம் ஏழஞ்சலிப்பிரமாணம். இரத்தம் எட்டஞ்சலிப்பிரமாணம். இரசம் ஒன்பதஞ்சலிப்பிரமாணம். சலம் பத்தஞ்சலிப்பிரமாணம் பொருந்தியிருக்கும்.

அஞ்சலி—இரண்டுசேரங்கை கொண்டது.

வாயுவிற்குருவின்மையால் அளவையும் கூறப்பட்டிலது.

ஆடவர்களுக்குத் தத்தங் கைகளினால் ஓசசு தலைமூளை சுக்கிலம் ஆகிய இவைகள் பிரஸ்ருதப்பிரமாணம் பொருந்தியிருக்கும். பெண்களுக்குத் தத்தங்கைகளினால் முலைப்பால் இரண்டஞ்சலிப்பிரமாணமும் இரஜஸு நான்கஞ்சலிப்பிரமாணமும் பொருந்தியிருக்கும். பிரஸ்ருதம்—சேரங்கை கொண்டது.

நோயற்ற சாதாரணமான சரீரத்திலே மச்சையாதி தாதுக்கள் மேலே வரையறைசெய்த பிரமாணங்களாகவே இருக்கும். ஆயின் அவைகள் கூறிய பிரமாணங் கடந்து கூடினுங் குறையினும் அப்பேதம் வியாதிகளினாலாயதென்று ஆயுள்வேதபண்டிதன் தன் நுண்ணுணர்வுகொண்டு காணுதல் தகுதியாகும்.

இரசதாதுவில் இரத்ததாதுவும் அதினின்று மாம்சதாதுவும் அதினின்று மேதோதாதுவும் அதினின்று அத்திதாதுவும் அதினின்று மச்சைதாதுவும் அதினின்று சுக்கிலதாதுவும் அதினின்று கருவும் உண்டாம். இரசதாது ஆதி தாதுக்களின் சாரமே இரத்ததாது ஆதி தாதுக்களாகுமென அறிக.

இரசதாதுவிற்குக் கபமே மலமாம். இரத்ததாதுவிற்குப் பித்தம் மலமாம். மாம்சதாதுவிற்கு நாசிகாதுவாரங்களிலே திரளும் அழுக்குகளே மலமாம். மேதோதாதுவிற்கு வியர்வையே மலமாம். அஸ்திதாதுவிற்கு நகரோமங்கள் மலங்களாம். மச்சதாதுவிற்குத் தோலிலும் கண்களிலுமுள்ள நெய்ப்பசையே மலங்களாம். சுக்கிலதாதுவிற்கு ஓஜசே மலமாம்.

### சீவன்.

தோஷங்களின் கலப்பின்றிய சுக்கில சோணிதப்பெருக்கில் சீவாத்மாவானது கழிந்தபிறவியிற் செய்துவைத்த கன்மசம்பந்தத்தினாலும் அவிச்சை முதலிய அளவிறந்த கிலேசங்களாலும் உந்தப்பட்டு,

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திக்கடைக் கோலிற்றேன்றும் அக்கினிபோலக் கருப்பவடிவாகப் பரிணமிக்கும். பூதங்கள் சூக்குமம், தூலம் என இருவகைப்படும். சூக்குமபூதமெனப் படுவது, சீவன் நிலைத்திருத்தற் கிடமாகவும் உடலை நீத்துயிர்போங்கால் அதனுடன் செல்லும் இயல்பினையு முடையதாகவும் உள்ளதாம்.

தூலபூதமெனப்படுவது உதரத்திற் றேன்றிய சீவனைச் சார்ந்து உட்கொள்ளப்படும் உணவின் பேதங்களுக்கேற்ப எழும் வளர்ச்சியினையுடையதாகிக் கருவினையும் வளரச்செய்துநிற்பதாம்

சூரியகிரணத்தினொளி கண்ணாடியின் வழியே பஞ்சினைச் சென்று பற்றுதல் வெளிப்படப் புலப்படாவாறுபோலச் சீவனும் பிண்டத்தைச் சென்று பற்றுந் தொழிலும் புலப்படுதல் இல்லையாம்.

உருக்கிய உலோகம், காரணமாய் நின்ற கருவுட்புகுந்து பல்வேறு வகையுறநின்ற உருவங்களெனப்படும் காரியங்களைச் சென்றடையுமாறுபோல, சீவனும் பழையவினைகள் காரணமாகப் பலதிறத்தினவாய்க் காரியங்களாய் நின்ற சரீரங்களைச் சென்றடையும்.

---

## நீதிவாக்கியங்கள்.

அநுட்டானத்திற்குக்கொண்டுவரற்பாலன

௧. நாடோறும் இரண்டுமணி நேரம் நடத்தல் வேண்டும்.

௨. இரவில் எழுமணி நேரம் நித்திரை செய்தல் வேண்டும்.

௩. புலரிக்காலத்திலே கண்ணுறக்கம் தெளிவுற்றவுடனே சோம்பிக்கிடத்தலின்றிச் சயனத்தைவிட்டெழுதல் வேண்டும்.

☞ (உறக்கம் நீத்து ஐந்து நிமிஷத்துள் படுக்கையைவிட்டு எழாதொழியின், படுத்திருந்த சயனம் தானாகவே புரண்டு கீழே வீழ்த்திவிடும்படி, சயன மொன்று ஒருதச்சனால் பரிஸ் நகரிலே இப்பொழுது செய்யப்பட்டிருக்கின்றதாம். இத்துடனுதவினையு நோக்குக.)

௪. எழுந்தவுடன் சரீராப்பியாசம் ஒருசிறிதாயினுஞ் செய்தல் வேண்டும்.

௫. கிராமவாசிகளுட் சிலர் நகரத்திலுள்ளார் பெருண்டியுடையார் என்றும் அதற்குக்காரணம் விரைவிலுண்ணும் வழக்கமில்லாமையே என்றும் சொல்வது கேட்கப்படினும், உண்ணுங்கால் விரைதலின்றி உணவினை மென்மெல நன்றாகமென்றே உட்கொள்ளுதல்வேண்டும்.

௬. அமிர்தமேயாயினும் அளவறிந்துட்கொள்ளல் வேண்டும்.

௭. தாகந் தணிதற்கு வேண்டுமளவானன்றி நீர்பருகல் ஆகாது.

௮. அளவ்கடவாது பயனில்மொழி கிரவலின்றி வார்த்தையாடல் வேண்டும்.

௯. எத்துணைச்சிறந்தவிசேடமுடையதாயினும், எண்ணியவைகளை விளக்கமுறக்கூறிக் கேட்பார் உள்ளக்குறிப்பினை முகத்தினளவையானுய்த்துணர்ந்து அடக்கமுடன் மென்மெலப் பேசல்வேண்டும்.

௰ எவற்றை வெளிப்படக் கூறுதற்கச்சமுண்டாமோ அவற்றைச் செய்யாதொழிதல்வேண்டும்.

௧௧. மற்றையோர் யாரும் எம்மை வேண்டிநிற்பார்கள் என்பதையும் நாமோ ஏனையோரை எதிர்பார்த்திருத்தல் ஆகாது என்பதையும் மறத்தல் ஆகாது.

௧௨. பொருளாசை எத்துணை வேண்டுமோ அத்துணையே இருத்தல்வேண்டும்.

௧௩. நம்மேவல்வழியேநம்பொருள்நிற்றலன்றி நம்பொருள் விதித்தவழியில் அதற்கேவல் பூண்டொழுகல் பெருங்குற்றங்களைவருவிக்கும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யாழ்ப்பாணம் இருபாலை
வித்துவசிரோமணி
சேனாதிராயமுதலியாரவர்கள் இயற்றிய

# நல்லைவெண்பா.

(உசு-ம் பக்கத்தொடர்ச்சி.)

மெய்ப்புலவ ருள்ளுறலான் மேகமதி லூர்தல
லொப்புவனை நாயகனு நல்லூரே—யப்புருவ
நஞ்சார் கணியானு னன்கா னவர்முன்பு
நஞ்சார் கணியானு னடி.

புலவருள் உறல் - தேவர் நடுவே வீற்றிருத்தல். மேகம் அது இல் ஊர்தல் - முகிலை வாகனமாகக் கொண்டு செலுத்தல். என இந்திரனுக்கியையக்கொள்க. மேகம் அது என்புழி அது - பகுதிப்பொருள் விகுதி. இந்திரனுக்கு மேகவாகனன் என்னும் பெயருண்மையால் மேகத்திலூர்தல் கூறப்பட்டது. ஒப்பு - உவமை. உவனை நாயகன் - சுவர்க்கலோக வரசனாகிய இந்திரன்.

புலவர் - கற்றோர். உள்ளுறல் - தியானித்தல். மேகம் மதில் ஊர்தல் - முகில்கள் மதிலிலே தவழ்தல் என நல்லூருக் கியையக் கொள்க. மெய்ப்புலவர் உள் உறல் என்பதற்கு இறையனாருளிய அகப்பொருணூலுரையின் மெய்ம்மையைத் தெளிவித்த சங்கப்புலவராகிய குன்றமெறிந்த குமரநாயகர் தன்னிடத்தே கோயில்கொண்டெழுந்தருளியிருத்தல் என்பாருமுளர். அம்பு உருவம் நஞ்சு ஆர் கண்ணியான் - அம்புபோன்ற அழகிய நஞ்சார்ந்த கண்களை உடைய வள்ளிநாயகியாரை உடையவர். அப்பு - வலித்தல் விகாரம். அப்பு - கடல் எனினுமாம். ஆம் நன்கானவர் முன் - உண்டாகின்ற நன்மையினையுடைய வேடுவர் முன்பே. நன் - யமக நோக்கிய நகரத்திரிபு. புனம் - தினைப்புனம். புனம் - யமக நோக்கிய நகரத்திரிபு. சார்தல் - வந்துறல். கணி - வேங்கைமரம். ஆதல் - உருவங்கோடல். (கஉ)

நத்தமூ ருங்கயத்தா னன்கிளைகொள் பாடலத்தாற்
சித்தசவேள் போலுந் திருநல்லை—முத்தின்
றிருத்தணிகை மாமலையுந் திண்கோட்டிற் காட்டுந்
திருத்தணிகை மாமலையான் சேர்வு.

நத்தம் ஊரும் கயம் - இராக்காலமாகிய ஊருகின்ற யானை. கிளைகொள் பாடலம் - கிளியாகிய கொள்ளப்படுகின்ற குதிரை. என மன்மதனுக் கியையக் கொள்க. கிளை - இடைக்குறை. சித்தசவேள் - மன்மதன்.

நத்தம் ஊரும் கயம் - சங்குகள் தவழ்கின்ற குளம். கிளை - மரக்கிளை. பாடலம் - பாதிரிமரம். என நல்லூருக் கியையக் கொள்க. முத்தின் திருந்து அணி - முத்துக்களின் திருந்தமாகிய வரிசையினையும். திருத்து - வலித்தல். கைமாமலையும் - யானைகளையும். கோட்டிற் காட்டும் - சிகரத்திலே காட்டு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கின்ற திருத்தணிகைமலை. முத்தின் திருந்திய அணியினை, யானைகளும், தமது மருப்பிலே காட்டுகின்ற என வேறுமொருபொருள் தோன்றிற்று. யானையின் கொம்பும் முத்தின் பிறப்பிடமென்றுணர்க. (௧௩)

தாவார் கலியடக்கு மத்தவளந் தாங்குதலா
னாவார் தமிழ்முனிநேர் நல்லூரே—பூவாரும்
வாளங் கெடுத்தார்ப்பில் வந்த தனிமாயா
வாளங் கெடுத்தார் வழி.

தாவு ஆர்கலி - பாய்கின்ற கடலினை. அடக்கும் - உள்ளடக்கிய. அத்த வளம் - திருக்கரத்தின் மாட்சிமை. என அகத்தியமுனிவருக் கியையக்கொள்க. தா ஆர் - குற்றநிறைந்த. கலி - வறுமை. அத்தவளம் - செல்வவளங்கள். என நல்லூருக் கியையக்கொள்க. நாவார் - தமிழின் விசேடணம் பூ - கூர்மை. வாள் அங்கு எடுத்து - வாட்படையினை (திருக்கரத்து) ஏந்தி. ஆர்ப்பில் வந்த தனி மாயா வாளம் - ஆர்ப்புடன் வந்தெதிர்த்த ஒப்பற்ற மாயாரூபமாகிய சக்கிரவாளப் பறவையை. சக்கிரவாளப் புள்ளுருக் கொண்டு வந்தவன் சூரபன்மன் என்றறிக. கெடுத்தார் - அழித்தருளினவர். (௧௪)

பூமேல்வாழ்ந் தீகை யுடையார் மனைப்பொலிவான்
மாமாது போல வளர்நல்லை—மாமணிகொ
ளாரு னனத்தா னருட்குரவ னம்புயத்த
ராறு னனத்தா னகம்.

பூமேல் வாழ்ந்து - தாமரையிலே வீற்றிருந்து. ஈகையுடையார் மனைப்பொலிவு - பொன்னுடையுடைய விட்டுணுவினது மனைக்கிழத்தியாம் அழகு எனத்திருமகளுக்கியையக்கொள்க. பூமேல் வாழ்ந்து - பூவுலகிலேவாழ்வுடையராய். ஈகையுடையார் - கொடையுடைய வள்ளல்களது. மனைப்பொலிவு - மாளிகைகளின் பொலிவு. என நல்லூருக் கியையக்கொள்க. மாமாது - திருமகள். மணி கொள் ஆறுன் - இரத்தினங்களை உடைய கங்கையைச் சூடியருளிய சிவபெருமான். அனத்தான் - பிரமா. ஆறு ஆனனத்தான் - ஆறு திருமுகங்களை உடையவர். (௧௫)

சீரயனால் வாயிசைந்து செய்ய கலைமருவிப்
பாரதியை மானும் பதிநல்லை—நாரதன்செய்
யாகத் துவந்தா ரெதிர்வருமை யாரொருவி
யாகத்து வந்தா ரிடம்.

அயன் நால்வாய் இசைந்து - பிரமனது நான்குவாய்களினும் பொருந்தி. செய்ய கலைமருவி - செம்மையாகிய கலைஞானங்கள் மேவி. என நாமகளுக் கியையக்கொள்க. அயல் நால்வாய் - பக்கங்களிலே யானைகள். கலை - மான்கள். என நல்லூருக் கியையக்கொள்க. யாகத்து உவந்தார் எதிர்வரும் மையார் - யாகத்திலே மகிழ்வுகொண்டிருந்த தேவர்க்கெதிரே தோன்றி நடந்த தகரினை உடையார். ஒரு வியாகத்து வந்தார் - ஒப்பற்ற விசாகநாளிற் றிருவவதாரஞ் செய்தவர். (௧௬)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காளகண்ட னன்கிசைமெய்ப் பூவையரி கண்ணுறலால்
வாள்வயங்கொ ளையனு மாநல்லே—நீளரசு
மாநாக மாளவைத்தார் வைவேல் பணித்தரியூர்
மாநாக மாளவைத்தார் வாழ்வு.

காளகண்டன் (கண்) - நஞ்சுபொருந்திய திருமிடற்றினையுடைய சிவபெருமானிடத்தும். நன்கு இசை மெய் பூவை - நன்றாய் (அச்சிவபெருமானுருடைய திருவுருவத்திலே) இசைந்த திருமேனி காயாம் பூவைப்போன்ற. அரிகண் - விட்டுணுவினிடத்தும். உறல் - பிறத்தல். என ஐயனுருக் கியையக்கொள்க. கண் முன்னுங் கூட்டப் பட்டது. காளகண்டம் - மயில். பூவை - நாகணவாய்ப்புள், அரி - கிளி. கண்ணுறல் - காணப்படுதல். என நல்லூருக் கியையக்கொள்க. அசுர மா நாகம் - அசுரனாகிய விலங்கெனப்படும் யானையாகிய தாரகன். மாள ஐ தார் - மாளும்படி அழகிய மாலே யணிந்த. வை வேல் பணித்து - கூரிய வேற்படையினை எவியருளி. அரி - இந்திரனை. ஊர் மா நாகம் ஆள வைத்தார் - (அவன்) ஊராகிய பெரிய சுவர்க்க உலகத்தினை ஆளும்படி (விண்குடி எற்றி) வைத்தருளினவர். (கஎ)

மற்குரிய தோளரசர் மாமுடியுங் கையகமும்
பொற்கவிகை காட்டும் புகழ்நல்லே—விற்குலவு
நாகங் கலந்தா ரெனநயந்தார் சேயிருவர்
பாகங் கலந்தார் பதி.

அரசர் முடி பொன் காட்டல் - வேந்தர் முடியிலே வீரஇலக்குமி வாசஞ் செய்தல். அரசர் முடி கவிகை காட்டல் - அவர்முடியின்மேல் குடைபிடிக்கப் படுதல். கையகம் பொற்கவிகை காட்டல் - கைகள் பொன்னைக் கொடுத்தலைச் செய்தல். வில் - ஒளி. நாகம் கலம் தார் என நயந்தார் சேய் - பாம்பு ஆபரணம் மாலே என்று சொல்லும்படி விரும்பிக் கொண்டருளிய சிவபெருமானுடைய திருக்குமாரர். இருவர் - தெய்வயானை யம்மையாரும் வள்ளிநாயகியம்மையாரும். இனி தோள் பொன்னையும் (வெற்றித்திரு) முடி கவிகையினையும் கையகம் பொற்கவிகையினையும் (கொடை) காட்டுமென்பாருமுளர். (கஅ)

பொன்னனையார் சிற்றிடையும் பூசுரர்கள்சொற்கிடையு
நன்னூல் கலைவிளங்கு நல்லூரே—முன்னிளைஞ
ரேற்றமருள் வீட்டினு னீர்வேலா னன்பருக்கே
யேற்றமருள் வீட்டினு னில்

மகளிர்களிடை நன்னூல் கலைவிளங்கல் - நல்ல நூலினுல் ஆகிய ஆடையும் மேகலை என்னு மாபரணமும் விளக்கமுறல். நூல் - ஆகுபெயர். அந்தணர்கள் வேதாத்தியயன சாலை நன்னூல் கலை விளங்கல் - அத்தியயன சாலையிலே வேதமாதி கலைகள் ஓதப்படுதல். கிடை - அத்தியயன சாலை. இளைஞர் - வீரவாகு தேவரை உள்ளிட்டோர். எற்ற - பெற்ற. மருள் - மயக்கம். வீட்டுதல் - அழித்தல். எற்றம் அருள் வீட்டினுன் - உயர்ச்சியை அருளுகின்ற மோக்ஷத்தையுடையவர். (கக)

அரும்புமுலை யார்வாணி யைம்பா லுடனே
கரும்பிரசங் காட்டுங்கார் நல்லே—பெரும்போர்
மலையுருவ வேலெறிட்டார் வாழ்த்தினரை மாய
மலையுருவ வேலெறிட்டார் வாழ்வு.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மகளிர்வாணி கரும்பு இரசம் காட்டும் - பெண்களது வார்த்தை கரும்பினது சுவையைக் காட்டும். அவர்ஐம்பால் கரும் பிரசம் காட்டும் - அப்பெண்களது கூந்தல் கரிய வண்டுகளைக் காட்டும். கருமை - பெருமை. மலை - கிரவுஞ்சம். உருவல் ஊடுசென்று அப்பாற்போதல். வேல் தொட்டார் - வெளிப்படை. மாய மலை வேறு உருவம் ஒட்டார் - அழியும் வண்ணம் மலைகின்ற பல்வேறு வகைப்பட்ட உருவங்களிலே சேர்க்காதவர். (௨௰)

கண்ணில வாளிக் கரும்புருவ வில்லினல்லா
ரெண்ணார் மதனோ டிகனல்லை—விண்ணோ
கருவா வினன்குடிநை காலுலவும் பண்ணைத்
திருவா வினன்குடியான் சேர்வு.

கண் நீல வாளி - கண்களாகிய நீலநிறம்பொருந்திய பாணம். கரும் புருவ வில் - கரிய புருவமாகிய விற்படை. என மகளிருக் கியையக்கொள்க. கள் நீல வாளி - தேன்செறிந்த நீலமலராகிய பாணம். கரும்பு உருவ வில் - கரும்பாகிய அழகிய விற்படை. என மன்மதனுக் கியையக்கொள்க. எண் ஆர் - மனதிலே தோன்றும். மனோசன் மனோபவன் எனும் வடமொழி வழக்குண்மைநோக்கி இங்ஙனம் கூறப்பட்டது. இகலல் - ஒத்தல். விண் நாகர் உவாவினன் - விண்ணிலுள்ள தெய்வயானையாரை உடையவர். குடிநை கால் உலவும் பண்ணை - ஆறுகள் கால்வாய்களில் உலாவுகின்ற வயல்கள். விண் நாகர் உவா இனன் - விண்ணிலுள்ள தேவர்களும் சந்திரனும் சூரியனும் எனப் பொருள் கொண்டு அதற்கேற்ப வேறு கூறுவாருமுளர். (௨௧)

கற்பகஞ்சேர் காமக் கொடியார்பண் பாலீழ
நற்பதியான் மேலுலகா நல்லூரே—கற்பமுறுங்
காலங் கடந்தான் கமலா சனனெனவே
ஞாலங் கடந்தா னகர்.

கற்பகம் சேர் காமக்கொடி ஆர் பண்பு - கற்பகவிருக்ஷத்தைச் சேர்ந்த காமவல்லி ஆர்ந்த தன்மை. என மேலுலகுக் கியையக்கொள்க. கற்பு அகம் சேர் காமக்கொடியார் பண்பு - கற்பின் நிலை தம்மிடத்துள்ள பெண்களது தன்மை. என நல்லூருக் கியையக்கொள்க. காமக்கொடியார் - இச்சையை விளைக்கும் கொடி போல்வார். ஈழநற்பதி - பொன்மயமாகிய பதி. என மேலுலகுக் கியையக்கொள்க. ஈழநற்பதி - ஈழமண்டலத்துள்ள நல்ல க்ஷேத்திரம் என நல்லூருக் கியையக் கொள்க. நல் பதி என்பது, நல் ஊர் - என்பதன் பரியாயங்களு மாயின. கற்பம் உறும் காலம் கடந்தான் - கற்பங்களாகப் பொருந்துகின்ற காலங்களைக் கடந்தவர். கமலாசனன் - பிரமா. ஞாலங்கள் தந்தான் - உலகங்களைப் படைத்தவர். (௨௨)

வரும்.

ஆ. சண்முகரத்தினசர்மன்

வண்ணைமாநகரம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குமாரசுவாமிப்புலவர் நூலகம்
புலவகரகம்,
மயிலணி : : சுன்னாகம்
இலங்கை.



# தலயாத்திரைப் பொதுவிதி.

—∞—

(௨அ-ம் பக்கத்தொடர்ச்சி.)

## ஸ்னானவிதி.

ஸ்னானம், நித்தியம், நைமித்திகம், காமியம் என மூவகைப்படும். அவற்றுள் தீர்த்த யாத்திரையில் செய்யும் ஸ்னானமும், நைமித்திகம் எனப்படும். இதற்குக் கோதானாதிகளும் அங்கங்கள்.

மகாதீர்த்தங்களில், ஸ்னானஞ் செய்யுங் காலங்களாவன: அயனம், அமாவாசை, பூரணை, மாசப்பிறப்பு, சங்கிராந்தி, சூரியகிரகணம், சந்திரகிரகணம், அர்த்தோதயம், மகோதயம் முதலியனவாம்.

தைமாதச் சங்கிராந்தியில் கங்காசாகரத்தும், மாசிமாசத்தும், அம்மாசத்துச் சுக்கிலபட்சச் சப்தமியில் பிரயாகையிலும், கார்த்திகை மாசத்தும் அம்மாசத்துப் பூரணையிலும் புட்கரத்தும், அர்த்தோதய மகோதயங்களில் சேதுவிலும், ஸ்னானஞ் செய்தல் விசேடமெனப்படும். குருக்ஷேத்திரத்தில், தினந்தோறும் மத்தியானத்தில் தானு தீர்த்தத்தில் ஸ்னானஞ்செய்தல் விசேடம். மூவுலகத்தும் வியாப்பியமாயிருக்கும் பிரமாவினால் சிருஷ்டிக்கப்பட்ட தீர்த்தங்களில், நைமிசாரணியத்து பூமியிலுள்ள தீர்த்தமும், குருக்ஷேத்திரத்தில், தினந்தோறும் மத்தியானத்திற்றானும் தீர்த்தத்தில் ஸ்னானஞ் செய்தல் விசேடம். மூவுலகத்தும் வியாப்பியமாயிருக்கும் பிரமாவினால் சிருட்டிக்கப்பட்ட தீர்த்தங்களினால், நைமிசாரணியத்துப் பூமியிலுள்ள தீர்த்தமும், புட்கரத்துச்சுவர்க்கத்திலுள்ள தீர்த்தமும், குருக்ஷேத்திரத்தில் மூவுலகின்கணுள்ள தீர்த்தமும், வியாபித்திருக்கின்றன. ஆதலால் அம்மூன்றும் பாரதத்து விசேடமெனப்பட்டன.

அயோத்தியில் கார்த்திகைமாத உதயங்களில் கோப்பிரதாரம் விசேடம். அது ஸ்ரீ இராமர் சுவர்க்கமடைந்த இடம்.

மதுரையில், ஆனி ஆடியில் சுக்கில துவாதசியிலும், ஐப்பசியில் சுக்கிலபட்ச யமத்துவிதியையிலும் யமுனாஸ்னானம் விசேடம்.

மாயாபுரியில், வைகாசிமாச உதயங்களிலும், புரட்டாதி மாசக் கிருட்டிணபட்ச சதுர்த்தசியிலும், ஆடி கார்த்திகை இவைகளில் துவாதசியிலும் கங்காஸ்னானம் விசேடம்.

காஞ்சியில் மாசி மாச உதயங்களில் சருவதீர்த்தத்து ஸ்னானம் விசேடம்.

துவாரகையில் புரட்டாதி மாசம் மாளயபட்சம், கோமுதி சங்கமத்து ஸ்னானம்விசேடம். கோமுதியில் சந்திரபாகை, கமலை என்னும் இரண்டுநதிகள் கூடச் சங்கமமாகின்றன.

கங்கைக்குக் கங்கா புட்கரமும், கோதாவரிக்குக் கோதாவரி புட்கரமும், கிருட்டிணைக்குக் கிருட்டிணை புட்கரமும் விசேடம். துங்கபத்திரையில் தக்ஷாயன புண்ணியகாலம் விசேடம்.

மகாதீர்த்தங்களில், சலமெடுத்துச் சௌசஞ் செய்ய வேண்டும். தீர்த்தமல்லாத சலம் என்பாருமுளர். இரசச்சுவலைகள் தீர்த்தம் எடுத்தன்றி மகாதீர்த்தங்களில் ஸ்னானஞ் செய்யலாகாது.

புதிதாகச் சென்ற தீர்த்தத்தில், மலமாசமானாலுந் தீர்த்தவிதியோடு ஸ்னானஞ் செய்தல்வேண்டும். முன்வந்த தீர்த்தத்தில் பத்துமாசஞ் சென்று பின் வந்தால் தீர்த்தவிதியோடு ஸ்னானஞ் செய்தல் வேண்டும்.

கங்கையிலே ஸ்னானஞ் செய்யுங்கால், ஆமை, மற்சம், அன்னம், நீர்க்காக்கை, முதலை, தவளை, இவைகளை மாவினாலாவது, வெள்ளி, பொன்னினாலாவது செய்து, கங்கையைப் பூசித்து, நமஸ்கரித்துவிடும்போது பழம் புட்பம் இவைகளோடு விடவேண்டும். இது கங்காதரிசனம்.

இம்மாதத்தில், இந்தப்பக்கத்தில், இத்திதியில் இக்கோத்திரனாகிய இன்ன பெயருடைய நான், இன்னகாரியத்தின் பொருட்டு ஸ்னானஞ் செய்கிறேனென்று சங்கற்பித்து, ஸ்னானஞ் செய்ய வேண்டும். வண்ணக்கன், வளவேசன் முதலிய குடிப்பெயருடையார், அப்பெயரைக் கோத்திரமாக வழங்குதலுமொன்று.

மாதா, பிதா, மனையாள், சகோதரன், நண்பன், குரு என்னும் அறுவருள் எவர்களை உத்தேசித்துத் தீர்த்தமாடினாலும் எட்டிலொருபங்கு ஸ்னானபலன் அவர்களையடையும்.

ஒருவரைப்போலப் பிரகிருதி பண்ணித் தீர்த்த ஸ்னானஞ் செய்வித்தாலும், எட்டிலொருபங்கு ஸ்னானபலன் அவர்களையடையும். பிரகிருதியா

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வது விதிப்படி முடிந்த தருப்பை. இது உயிரோடிருக்கிறவனுக்கும் இறந்தவனுக்குஞ் செய்விக்கலாம்.

ஸ்ஞனம், தர்ப்பணம், சிராத்தம், செபம், தானம் இவைகள் செய்யுங் காலங்களில், முஞ்சமென்னும் தருப்பையினுல், பவித்திரம் தரித்துக் கொள்ளல் வேண்டும். அத் தருப்பை கிடையா விடத்து, குசம், யவை, அறுகு, விடுகி, இவைகளாற் பவித்திரம் தரித்துக்கொள்ளலாம். குசசம்பந்தமான தோயம் ஆசமித்தல் சோமபானத்திற்குச் சமமென்று வியாசமுனிவர் கூறினர்.

நோயுடையான் கங்காசலம் எடுத்து சீதமாயாவது உட்டணமாயாவது ஸ்ஞனஞ் செய்யலாம்.

காலையில் கோமயமும், மத்தியானத்தில் மிருத்திகையும், சாயங்காலத்து இவ்விரண்டு மின்றியும், ஸ்ஞனஞ் செய்ய வேண்டும். அதை அவர்கள் ஸ்ஞனமென்பர். சைவர் காலையிலும் மிருத்திகை ஸ்ஞனஞ் செய்வர்.

நதிக்கு அபிமுகமாகவும், தடாகம்முதலிய தீர்த்தங்களில் சூரியனுக்கு அபிமுகமாகவும், ஸ்ஞனம், மார்ச்சனம், அகமருடண முதலியன செய்ய வேண்டும். மார்ச்சனம் அகமருடணம் இரண்டும் பிராமணர்க்குரித்து.

நதியில்லா விடங்களில் சைவர் வடக்கு முகமாகவும் ஸ்ஞனஞ் செய்யலாம். ஸ்ஞனமானவுடன் கங்காசமாபானமும் கோதானமுஞ் செய்து பின் தர்ப்பணம் சிராத்தம் தாமசமின்றிச் செய்தல் வேண்டும்.

கங்காசமாபானமாவது பாகீரதி, திரிபதகை, நந்தினி, தேவநதி, கங்கை என்ற நாமங்களை உச்சரித்துக்கொண்டு, கரையிலேறி, தெரிந்தாவது தெரியாமலாவது, என்னுற் செய்யப்படுங் குற்ற முழுதையும், உலகமாதாவே! நீ பொறுத்தருள்கவென்று, அஞ்சலியத்தனுய் நமஸ்காரஞ் செய்தல். இது கூர்மபுராணத்திற் கூறப்பட்டது.

அதன்பின்பு, சக்தன், பாதிரிப்பூ நிறமுடைய கன்றோடு கூடிய கபிலைப் பசுவை குளிப்பாட்டி, கொம்பிற் கிம்புரியும், கழுத்திற் கண்டாமணியும் தரித்து, பட்டினுற் கஞ்சுகம்போர்த்து அலங்காரஞ் செய்து பூசித்துக் குடும்பியாய், சாங்கமாய் வேதமோதிய சாதுவான வறுமையுடைய பிராமணனுக்குச் சுவர்ணதக்ஷிணையோடுதானஞ்செய்யவேண்டும்.

இவ்வாறு தானஞ் செய்தற்குரிய சற்பாத்திரமில்லாவிடத்து அச்சற்பாத்திரமான பிராமணனை உத்தேசித்து, அவனுக்குக் கொடுக்கிறேனென்று சங்கற்பஞ் சொல்லி. தானசலத்தைக் கங்கையிலே விடுத்துத் தத்தஞ் செய்து அப் பசுவைப் பின் உத்தேசித்த சற்பாத்திரத்திற்குக் கொடுக்க வேண்டும்.

சடகச் சிரார்த்தத்துச் சிராத்த லோபமின்மை தேவலர்க்கு உடன்பாடானுற் போல, இத்தானத்திற் குறைபாடின்மை, மச்சபுராணத்துக்கு உடன்பாடாதல் காண்க.

இவ்வாறு ஒருபசுவைத் தானஞ் செய்தவர் அதிக பலனை யடைவர்.

வரும்.

சிவ இ. மாரிமுத்து உபாத்தியாயர்
வண்ணார்பண்ணை.

# சிவபூசை.

(உகூ-ம் பக்கத்தொடர்ச்சி.)

சிவபூசையாவது, புட்பம் திருமஞ்சனம் முதலிய உபகரணங்கள் கொண்டு ஆத்துமசுத்தி தானசுத்தி திரவியசுத்தி இலிங்கசுத்தி என்னும் பஞ்சசுத்திகளும் செய்து, சிவலிங்கத்தின் பீடத்திலே சத்தியாதி சத்திபரியந்தபதுமமாகிய சிவாசனம் பூசித்து, அதன்மேல் இலிங்கத்திலே வித்தியாதேகமாகிய மூர்த்தியை நியாசஞ்செய்து அவ்வித்தியாதேகத்துக்குச் சீவனுயுள்ள நிஷ்களரூபரும் ஞானந்தமயரும் சர்வகர்த்தாவும் சர்வவியாபகரும் ஆகிய பரமசிவனுகியமூர்த்திமானைத் துவாதசாந்தத்தின்மேலே தியானித்து, முன்னே நியாசஞ் செய்த வித்தியா தேகத்தில் ஆவாகித்து, "சுவாமி, சருவஜகத்துக்கும் நாதரே. பூசையின் முடிபு எதுவரையுமோ அது வரையும் நீர் பிரீதியுடன் இவ்விலிங்கத்திலே சாந்நித்தியராய்இரும்." என்று விண்ணப்பஞ்செய்து, பூசித்து ஸ்தோத்திரம் பிரதக்ஷிணம் நமஸ்காரம் பண்ணி முடித்தலாம். "லிங்க" என்னும் தாது சித்திரித்தல் என்னும் பொருட்டாதலால், படைத்தல் காத்தல் முதலியவற்றுல் உலகத்தைச்சித்திரிப்பதாகிய பரமேஸ்வரப் பிரபாவமே லிங்கம் எனப்படும். அவ்விலிங்கத்தின் வியஸ்தித்தானமாகிய சைலம் ஸ்பாடிகம் க்ஷணிகம் லோஹசம்என்பனவும் உபசாரத்தாலே இலிங்கம் எனப்ப

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

டும். வித்தியா தேகமாவது பஞ்சகிருத்தியங்களை அதிட்டிக்கும் சத்தியேயாம். மூலமலம் முதலியன இன்மையால், சிவபெருமானுக்கு வைந்தவம் முதலிய சரீரம் இன்றிச் சத்திசரீரம் உண்டாம். அச்சரீரம் பஞ்சகிருத்திய உபயோகிகளாகிய ஈசானம் முதலிய பஞ்சமந்திரங்களாலே சிரம் முதலாகக் கற்பிக்கப்படும். சிவன் நிராகார வஸ்துவாகிய தம்மை ஆன்மாக்கள் தியானித்தல் பூசித்தல் கூடாமையால், அடியார்கள் அனுக்கிரகத்தின் பொருட்டே இச்சத்திகாரியமாகிய கற்பனாசரீரம் கொண்டார் என்க.

இவ்வாறு அன்போடு பூசைசெய்யப்படில், கருணாநிதியாகிய சிவன் இலிங்கத்தில் நின்று அப்பூசையை ஏற்று, அதுசெய்தார்க்கு அருள்செய்வர். அது—

“தாபரஞ்சங்கமங்களென் றிரண்டுருவினின்று, மாபரன்பூசைகொண்டுமன்னுயிர்க்கருளைவைப்ப, னீபரன்றன்னைநெஞ்சினினைவையேனிறைந்தபூசை, யாய்பரம்பொருளைநாளுமர்ச்சிநீயன்புசெய்தே.”

என்னும் சிவஞானசித்தியாரில் வரும் திருவிருத்தத்தினாலு முணர்க. அன்பின்றிச் செய்யப்படும் பூசை பயன்படமாட்டாது. அது

“நெக்குநெக்குநினைப்பவர்நெஞ்சுளே
புக்குநிற்கும்பொன்னார்சடைப்புண்ணியன்
பொக்கமிக்கவர்பூவுநீருங்கண்டு
நக்குநிற்பனவர்தமைநாணியே.”

என்னும் திருநாவுக்கரசுநாயனார் தேவாரத்தினாலுணர்க. இன்னும்

“கையொன்றுசெய்யவிழியொன்றுநாடக்கருத்தொன்றெண்ணப், பொய்யொன்றுவஞ்சகநாவொன்றுபேசப்புலால்கமழு மெய்யொன்றுசாரச்செவியொன்றுகேட்கவிரும்புமியான், செய்கின்றபூசையெவ்வாறுகொள்வாய்வினைதீர்த்தவனே.”

என்னும் பட்டணத்துப்பிள்ளையார் திருவாக்கானுமுணர்க.

சிவபூசை செய்தலாகிய பத்தியோகத்தை உடையவருக்குக் கருணாநிதியாகிய சிவபெருமான் இடபாரூடராய் வெளிப்பட்டுத் திருவருள் செய்குவர். சிவபூசையின் மிக்கபுண்ணியம் பிறிதில்லை. இச்சரீரம் உள்ளபோதே சிவலிங்கார்ச்சனைக்கு உரியோர்கள் சைவாசாரியரையடைந்து, சிவதீக்ஷை பெற்று, விதிவழுவாது மெய்யன்போடு சிவபூசை செய்தல் வேண்டும்.

சிவார்ச்சனைக்கு உரியரல்லாதவர் ஆசாரியரை அடைந்து தங்கள் தங்கள் அதிகாரானுகுணமாகிய தீக்ஷையைப் பெற்றுக்கொண்டு, தூலலிங்கமாகிய கோபுரத்தையும் தூபியையும் பத்திர புட்பங்களாலே பூசித்து, துதித்து, வலஞ்செய்து வணங்கல் வேண்டும்.

“உயர்ந்தகுலத்தோருட்பழுதறப்பிறரு
முயர்ந்தாரையல்லாதாகும்.”

“குறித்துமறுமைகுரவன்பதத்தை
குறித்தவன்செய்தீக்கைக்கொண்டு.”

“குறித்துச்சிவனெனக்கோபுரத்தைப்பூவும்
பறித்தருச்சித்தேத்துகபாங்கால்.”

என்பது சைவசமயநெறி.

“தமக்குமோருருவிற்பூசைசமையார்
தமக்குத்துணையாமோதான்.”

என்று சைவசமயநெறித் திருமறையுட் கேட்கப்படுதலால் தங்கள் தங்கள் வருணத்துக்கு அருகமாகிய ஒருருவினிடத்தே உயிர்க்குறவாகிய சிவபெருமானைப் பூசை செய்யாதவர்களுக்குப் பற்றுக்கோடாக ஒரு துணையுமில்லை.

### சிவபூசைபண்ணாதார் இழிவு.

### தேவாரம்.

“திருக்கோயிலில்லாததிருவிலூருந்,
திருவெண்ணீறணியாததிருவிலூரும்
பருக்கோடிப்பத்திமையாற்பாடாவூரும்
பாங்கினொடுபலதளிகளில்லாவூரும்
விருப்போடுவெண்சங்கமூதாவூரும்
விதானமும்வெண்கொடியுமில்லாவூரு
மருப்போடுமலர்பறித்திட்டுண்ணாவூரு
மவையெல்லாமூரல்லவடவிகாடே.”

“திருநாமமஞ்செழுத்துஞ்செப்பாராகிற்
றீவண்ணர்திறமொருகாற்பேசாராகி
லொருகாலுந்திருக்கோயில்சூழாராகி
லுண்பதன்முன்மலர்பறித்திட்டுண்ணாராகி
லருநோய்கள்கெடவெண்ணீறணியாராகி
லளியற்றார்பிறந்தவாறேதோவென்னிற்
பெருநோய்கள்மிகநலியப்பெயர்த்துஞ்செத்தும்
பிறப்பதற்கேதொழிலாகியிறக்கின்றாரே.”

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்னும் திருநாவுக்கரசுநாயனார் தேவாரத்தானு முணர்க.

அகத்தியமகாமுனிவர் தமக்கும் பிறர்க்கும் பெருங்கேடுசெய்த வில்வலன் வாதாவி என்னும் இருவரையும் கொன்ற பிரமகத்தியைச் சிவபூசைசெய்து நீக்கிக்கொண்டார்.

இராமசுவாமியும் தமக்கும் பிறர்க்கும் பெருந்தீமைசெய்த இராவணனைக் கொன்றமையினாலாகிய பிரமச்சாயையைச் சிவபூசைசெய்து மாற்றிக்கொண்டார்.

சிவதூஷணஞ்செய்த தக்கன் என்பான் காசியிலே சிவபூசைசெய்து அக்குற்றம் தீர்ந்து கணாதிபனுயர்த்தப்பட்டான்.

இன்னும் தேவர்கள் மனிதர்கள் இருடிகள் அசுரர்கள் இராக்கதர்கள் முதலிய பலர் சிவபூசைசெய்து மேலாகிய பதங்களைப்பெற்றார்கள்.

சிவபூசையைச் செய்யவேண்டிய முறைகளையெல்லாம் சற்குருவையடைந்து விதிப்படி தீக்ஷைபெற்று அவர் அருளிச்செய்தபிரகாரம் பேரன்போடு நியமமாக நாடோறும் சிவார்ச்சனைசெய்துவரின், "நெக்கு நெக்கு நினைப்பவர் நெஞ்சுளே—புக்குநிற்பன பொன்னார்சடைப் புண்ணியன்" என்று வாகீசர் அருளிச்செய்த வாக்குப்போல நின்று திருவருள் செய்வார்.

மா. சிவராமலிங்கம்பிள்ளை
ஆறுமுகநாவலர்வாசிகசாலை
வண்ணார்பண்ணை.

# திருமுருகாற்றுப்படை ஆராய்ச்சி.

அம்பிகைபாகனடிமலர்பரவுதூஉம்
செம்பொருள்ஞானஞ்சேருதற்பொருட்டே.

மணியும் கழுவாதொழிந்தால் வனப்புக்கெடும். அதுபோல என்புல்லறிவானாகிய சொல்லின் பகுதியீன்ற மறுவையும் சான்றோர் தமதறிவாகிய நீராற் கழுவி யமைத்துக்கொள்ளும்படி வேண்டுகின்றேன்.

மால்வரைபுரையும், மாடக்கூடலாலவாயிற் பால்புரை பசுங்கதிர்க் குழவித் திங்களைக் குறுங் கண்ணியாவுடைய, அழலவிர்சோதி யருமறைக்கடவுளருளிய கனமாப் பலகையேறித் தமிழாராய்ந்த நல்லிசைப் புலவர்களாகிய நக்கீரர்முதலியோராற் பாடப்பட்டு, சங்கத்தாராற் றொகுக்கப்பட்ட பத்துப்பாட்டில் முதலாவதுபாட்டே இத்திருமுருகாற்றுப்படை. பத்துப்பாட்டாவன, நக்கீரனார்நவின்ற திருமுருகாற்றுப்படை, நெடுநல்வாடை, முடத்தாமக்கண்ணியார்மொழிந்த பொருநராற்றுப்படை, நத்தனார்நவின்ற சிறுபாணாற்றுப்படை, உருத்திரங்கண்ணனாருரைத்த பெரும்பாணாற்றுப்படை, பட்டினப்பாலை, நப்பூதனார்பாடிய முல்லைப்பாட்டு, மாங்குடிமருதனார்வகுத்த மதுரைக்காஞ்சி, கபிலர் கழறிய குறிஞ்சிப்பாட்டு, பெருங்கௌசிகனார்செய்த மலைபடுகடாம், அல்லது கூத்தராற்றுப்படை என்பன.

"முருகுபொருநாறுபாணிரண்டுமுல்லை-பெருகுவளமதுரைக்காஞ்சி-மருவினிய-கோலநெடுநல்வாடைகோல்குறிஞ்சிபட்டினப்-பாலைகடாத்தொடும்பத்து."

என்னும் வெண்பாவால், பத்துப்பாட்டு இவையென்பது புலப்படும்.

ஒவ்வொன்றும் நூறடிச்சிறுமையும் நூற்றுப்பத்தடிப்பெருமையு முடைத்தாய், ஓங்கியவதுநானகவலின்வருமே. என அகவற்பாவாற் பத்துப்பாட்டுப் பாடுவது "மூன்றடியகவற்கிழி" யென்பர் ஆசிரியர் அமிர்தசாகரர். அகவல் - அகவிக்கூறுதல். அகவல் - அழைத்தல். இதுநால்வகைச்செய்யுளுள், தொகைநிலைச்செய்யுளின்பாற்படும். தொகைநிலைச்செய்யுள் ஒருவருரைத்தவும் பல்லோர்பகர்ந்தவும் என்றவாறு ஒருவராலுரைக்கப்பட்டுப் பலபாட்டாய் வருவனவும் பலராலுரைக்கப்பட்டுப் பலபாட்டான் வருவனவுமாம். அவற்றுள் இப்பத்துப்பாட்டுப் பல்லோர்பகர்ந்ததெனக.

இப்பத்துப்பாட்டில் ஒவ்வொன்றும், தன்னை நன்காராய்ந்து பொருணிலை யுணர்வார்க்கே மிக இனிமைபயப்பது. மோனை எதுகை முதலிய நிர்ப்பந்தம் வேண்டாது பெரும்பான்மையுஞ் செந்தொடை நெறித்தாய், அகவற்பாவா னமைந்துள்ளது. மூலத்தாற் பொருள் எளிதில் விளங்குவதன்று. இனிய நடையும் கருவூலம்போற் சமையத்துக்கேற்ற சொற்களும், கல்வியிற் பெரியாருள்ளத்தையும் மயக்கும் உயர்ந்த கருத்துக்களும், பிறபாடைச் சொற்கலப்பில்லாத் தூய்மையும் நிரம்ப

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

லுந் தேம்பி வழிந்து கற்றறிந்தார்க்குக் கழிபேருவகையோடுறுதிபயப்பது. தமிழ்மொழியின் விழுமியவனப்பையும், பெருமதிப்பையுஞ் செவ்வனேயெடுத்து விளக்குமுகத்தானே தலைமைப்பாடை தமிழ்ப்பாடையேயெனக் காட்டுவது. இவையன்றி, தமிழ்நாட்டு மூவேந்தரது இராசதானியாகிய, மதுரை, வஞ்சி, உறந்தை என்னும் மூன்று நகரங்களினியல்பையும், உலகறிந்த புகழையுடைய ஆவியர் பெருமகனுகிய பேகன் முதலிய, எழ்பெருவள்ளல்களுடைய ஈகைச் சிறப்பையும், பண்டைக்காலத் தமிழ்மக்கள் ஒழுக்கம்முதலியவற்றையும், மலை, கடல். நாடு. சிறுபொழுது, பெரும்பொழுது முதலியவற்றையும், அக்காலத்திருந்த தமிழ்நாட்டரசர்களையும், அவர்களியன்முறைகளையும், வள்ளன்மைகளையும், தமிழ்நாட்டுப் புலவர்கள்பாலும், தமிழிலும், அவர்கள் வைத்திருந்த நன்குமதிப்பையும், ஆக்கப்பாட்டையும், கருப்பொருள், உரிப்பொருள்களின் பாகுபாட்டையும், மக்கட் குறுதிபயக்கும், அறப்பகுதி, பொருட்பகுதி, இன்பப்பகுதி, முதலிய திறங்களின் கூறுபாடுகளையும், இன்ன பிறவற்றையும் எடுத்து விளக்கியும், தொகுத்துங் கூறுவது.

இங்ஙனம், அமிழ்தினிற் சிறந்த தமிழ் எனும் மடந்தையின், கந்தரத்தணி மணிக்கலனரசென்ன உத்தமர் புகழும் இப் பத்துப்பாட்டை, மதுரை ஆசிரியர் பாரத்துவாசி உச்சிமேற்புலவர்கொள் நச்சிஞர்க்கினியருரையோடு, எட்டுப்பிரதிகளிலுள்ள வழூஉக்களைக் களைந்து அச்சிட்டுத் தமிழ்மக்கட்களித்த, அறிவொழுக்கங்களான்ற மகாமகோபாத்தியாயர் பிரமஸ்ரீ. வே. சாமிநாதையரவர்கள் பரோபகாரம் என்றும் மறக்கப்படுவதொன்றன்று. அன்றியும் ஐயரவர்கள் தமிழின்மீது வைத்திருக்கும் அபிமானமோ பிறமானங்கள் எல்லாவற்றினுந் தலையாயதாயிருக்கின்றது.

மேற்கூறிய பத்துப்பாட்டில் முதலாவதுபாட்டே திருமுருகாற்றுப்படை. இது "உலகமுவப்ப வலனேர்புதிரிதரும்" என்பதுமுதல், "பழமுதிர் சோலைமலைகிழவோனே" என்பதிறுதியாக நடகஎ அடிகளையுடைத்து. வீடுபெறுதற்குச் சமைந்தானோரிரவலனை வீடுபெற்றுனொருவன் முருகக்கடவுளிடத்தே ஆற்றுப்படுத்தியதாக அம் முருகக்கடவுளை மதுரைக்கணக்காயஞர் மகன் நக்கீரஞர் பாடியது. இதை நக்கீரஞர் பாடினர் என்பதற்குக் காரணங் கூறுதும். நக்கீரஞர் சாபவிமோசனம் செய்துகொள்ளும் நோக்கமாக கைலாசகிரிக்குச் செல்வான் விழைந்து உத்தரதிசையிற்செல்பவர்; வழியிடைஎதிர்புகும் இமயமலைச்சாரலையண்மிஆண்டுள்ள வாலிய நீர்த்தடாகம் ஒன்றிற்புக்கு நீராடிச்செய்யவேண்டிய நியதிகளைமுடித்துக் கரையேறி ஆலமரநீழலில் வதிந்து சிவபூசைசெய்தார். செய்யும்போது அம்மரத்திலை ஒன்று இருபாதியாகி ஒன்று தடாகத்தினும் மற்றது கரையினுமாக வீழ்ந்து, தடாகத்து வீழ்ந்த பாதி மீனுயும், கரையில்வீழ்ந்த பாதி பறவையாகியும் ஒன்றையொன் றீர்த்தது. இப்பேரதிசயத்தினுல் நக்கீரர் தாம் செய்த சிவபூசையைவிடுத்து இதையேநோக்கியிருந்தார். மனம்வேறொன்றை அவாவியதாற் சிவபூசையிற் பிழைபட்டார். பல்லாண்டுகளாகச் சிவபூசையில் வழீஇயினுர் ஒன்றொழித்த ஆயிரவரை ஒரு மலைக்குகையில் உண்ணும்படி யடைத்துவைத்துவிட்டு ஒருவர்மாத்திரங் கிடையாது ஒருபூதம் உலைந்து திரியும்போது.

தொடரும்.

அ. க. வைத்தியலிங்கஉபாத்தியாயன்
இணுவில் சைவகலாசாலை.

---

## சீதனம்.

சீதனம் என்பது பெண்களுக்கு நாயகனுடைய ஆதரவு குன்றிப்போகவரும் காலத்தில் உதரபோஷணநிமித்தம் கொடுக்கும்தனமே சீதனம் எனப்படும். இச்சீதனம் காலத்துக்குக்காலம் தேயத்துக்குத்தேயம் வித்தியாச முடைத்தாய்ப் பலவகையான ஆசரணையி லிருக்கின்றது. பெண்களுக்கு நாயகனுடைய ஆதரவு இல்லாது போம்பொழுது உதரபோஷணநிமித்தம் கொடுக்கும் தனமாதல் பற்றித்தான்; நீதிநூலாரும் ஒருவன் தான் வருந்தித்தேடியது உத்தமமாகிய தனம் என்றும் பிதா மாதா வழியால் வந்தது மத்திமமாகிய தனம் என்றும் ஒருவருக்குக்கீழ்ப்படிந்து சேவித்துவந்த தனம் அதமமாகிய தனம் என்றும் பெண்ணுல்வந்த தனம் அதமாதமம் என்றும் கூறியிருக்கின்றனர். இதுவுமன்றிச் சீதனத்தை அழிவுசெய்யும்கருத்துக்கொண்ட நாயகன் நம்பிக்கைத்துரோகிகள் அடையும் நரககதியை அடைவான் என்றும் எங்கள் தருமசாத்திரங்கள் சொல்லுகின்றன.

இந்தியாவிற் சிலவிடங்களில் பெருந்தொகையானபொருளைப்பெற்றுருக்குக்கொடுத்துப் பெண்கொள்ளுகின்றனர். ஆயின் தற்காலச் சீர்திருத்தம் புகுந்தபின்னர் சிற்சிலவிடங்களில் பெண்ணுக்குச்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சீதனமாகவும் பொருள் கொடுக்கின்றார்கள். யாழ்ப்பாணத்திலோவெனில் சீதனம் கொடுக்கும் வழக்கமும் சீதனத்துக்காகவே விவாகஞ்செய்யும் வழக்கமும் மிக்ககொடூரமாய் வளர்ந்து கொண்டது. பெண்ணைப்பெற்ற பிதா மாதாக்களும் முதலாம் இரண்டாம் பெண்ணுக்குத் தங்கள் பொருள் எல்லாவற்றையும் சீதனமாகக் கொடுத்துவிட்டுப் பின்னர்க் குடியிருக்க இடமுமில்லாமல் மற்றைப்பெண்களையும் அந்தரிக்கும்படி தெருவிலே விட்டு உலைகின்றார்கள். பெருந்தொகையான தனவந்தர்களோ என்றால் தங்கள் புதல்விகளுக்கு எப்படியோ ஒரு உத்தியோகத்தனைப் பார்த்துச் சடங்கு செய்ய வேண்டும் என்ற விரதம் பூண்டுகொள்கின்றார்கள்.

கச்சேரியில் பத்து ரூபா சம்பளம் என்றவுடன் அந்த மாப்பிள்ளையை எனக்கோ உனக்கோ என்று இத்தனவந்தர் விவாகம் பேசி ஐயாயிரம் பதினாயிரம் எழுபதினாயிரம் என்று தொகை சொல்கின்றார்கள். சிலகாலம் பிறக்கிராசி அப்புக்காத்து வேலைக்கென்றால் பதினையாயிரம் இருபதினாயிரமும் பெண்ணுங் கிடைக்கும். இவ்வியாபாரம் இப்போது சரசமாகிவிட்டது. இது பெற்றார் செய்கை. இனி நாயகர்கள் என்செய்கின்றனர் எனில் சீதனக்காணியை விற்றுத்தான் எஞ்சிய அப்புக்காத்து பிறக்கிராசிக் கோசை (Course) முடிக்கின்றார்கள். சிலர் இதை விற்று அல்லது ஈடுவைத்துத்தான் வியாபாரம் முதலிய தொழிலில் கையிட்டுக் குதூகலமடைகின்றார்கள்.

ஒருவேளை இச்சொத்தெல்லாம் பெண்வழிக்கு சேர்ந்துவிடுமே என்றஞ்சி அப்பெண்ணை எவ்வித தந்தரத்தாலோ வசீகரித்துச் சீதனச் சொத்தெல்லாவற்றையும் தன்வழியாருக்கு அடைவித்துச் சாதனம் பிறப்பித்துக்கொள்ளுகின்றனர். சிலர் பெண்கள் கருப்பவதியாய்விட்டால் மாதம் செல்லச் செல்ல அவர்கள் சரீரம் நோய் அடைவதையும் தளர்வுறுவதையும் பார்த்துவிட்டு அப்பெண்களிடம் "ஒருவேளை உனக்கு ஒரு இராசிகம் தெய்வீகம் சம்பவித்தால் அப்போது நான் என்ன செய்வேன் உன்னுடைய பெற்றார் முதலியோர் உன்பொருள்களைக் கொண்டுபோய்விடுவார்கள்" என்று சொல்லி முறையிட்டு அச்சீதனங்களைத் தம்பேரில் சாதனம் பிறப்பித்துக்கொள்ளுகின்றனர்.

அவ்வாறு சம்பவித்துவிட்டால் அப்பெண்ணுக்குரிய உரித்தாளராகிய பெற்றார் சகோதரர்கள் பெருந்தொகைச் சீதனத்தைக் கொடுத்தும் இப்போதொன்றுமில்லையே என்று ஏங்குகின்றார்கள். ஊன்றியோசிக்கின் யாழ்ப்பாணத்தில் விவாகம் என்பது சாதகப்பொருத்தம், சுயகுடும்பம், இனசனம் முதலியன இவைகள் ஒன்றையும் அனுசரித்ததன்று. பின்னர் விவாகம் என்பது (*Mr. Money*) பணமென்னும் பேய்களுக்கேயாய் முடிகிறது. ஆடூஉ மகடூஉ ஆகிய இருவரும் புத்திரப் பேற்றின் பொருட்டாகவே மாத்திரந்தான் தருமசாத்திரமுறைப்படியோ காந்தர்வமுறைப்படியோ செய்துகொள்ளுவதுதான் விவாகமாகுமேயன்றி, ஐம்பதினாயிரம் சீதனத்துக்கும் பிறவற்றிற்கும் செய்வது விவாகமன்று. ஆயின் யாழ்ப்பாணத்தில் நடப்பனவெல்லாம் பெரும்பான்மையும் பணத்திற்கும் பணத்திற்குமேயாம்.

இதனால் எத்தனை எத்தனையோ குடும்பங்கள் கலகப்பட்டு குலை குலைந்துபோய்விட்டன. எத்தனையோ பெண்கள் சோரநாயகரைத் தேடி ஓடிவிடுகின்றனர். எத்தனை எத்தனை விவாகப்பிரிவினை (*Divorce cases*) வியாச்சியங்கள் நீதித்தலங்களில் இழுபடுகின்றன. இனிக் கொடுமையறிந்த பெற்றாரும் சீதனம் கொடுக்கும்பொழுதே ஆரம்பத்திலேயே சந்ததியில்லாவிடில் சீதனம் கொடுக்கும் தங்களை அவ்வாதனம் அடையவேண்டும் என்றும் அல்லது இருபது முப்பது வருஷத்துக்குள்ளாக இவ்வாதனங்களை விற்க அல்லது ஈடு முதலியன செய்யலாகாதென்றும் வாசகம் கண்டு சீதனம் கொடுக்கின்றார்கள். அப்பெண்ணுக்கு அவர்கள் சொற்படி சந்ததியின்றிப்போகின்றது.

சில நாயகர் சொற்பகாலம்வரையும் சுகித்திருந்துவிட்டுக் காணி பூமி முதலியவற்றில் நீண்டிக்கொள்ள வழியில்லாமை கண்டு அப்பெண்ணை அந்தரிக்கவிட்டு விட்டோடிவிடுகின்றார்கள். இனி பெண்களோவெனில் பெருந்தொகைச் சீதனம் வைத்திருந்தபோதிலும் நாயகனைத் தெய்வம்போற் பேணி ஒழுகுவாரும் சிலருண்டுதான். ஏனையோர் எல்லாம் தாம் பெற்ற சீதன முதிர்ச்சியினாலே புருஷனைத் தன் வீட்டு நாய்போல மதித்து ஒதுக்கிவிடுகின்றார்கள்.

சிலர், சீதனத்தோட்டவெளி அடைப்பித்துக் களைத்து வந்து, ரேஸ், என்றுகூப்பிட ஆடுகதிரையிற் கண்ணுறங்கிக்கிடந்த சீதனகாரி, சாப்பாடு கொடுக்கும்படி சமையல்காரனுக்கு ஆடர் செய்கின்றா.

சீதனத்தை முடித்துக்கொண்ட நாயகனுக்கு மனைவியானவள் தான்செய்யவேண்டிய உபசரணைகளைச்செய்வதற்கு ஒருபோதும் முன்வரமாட்டாள். அகங்காரமேதலைமேற்கொண்டு தன்னாயகனை தன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தோட்டத்து நாயினும் கடையாய்ப் பாவித்துக்கொண்டும் வேலைக்காரன் சமையற்காரன்முதலிய ஆசாமிகளை உபசரித்துக்கொண்டும் காலங்கழிப்பாள். தன்னுயகன் இக்குறைகளைத் துலக்கிச் செப்பிடில் அன்று அவருக்கு சோறும் இல்லையாய் வண்டிக்கரத்தையு மில்லையாய் ஆபீசுக்குப் பகற்சாப்பாடு அனுப்பப்படுவதும் இல்லையாய்ப் போவதுமாத்திரமன்றி வீட்டினின்றும் துரத்தப்பட்டுக் (gate) கேட்கதவுக்கு வெளியே பிடர்பிடித்துத் தள்ளப்படுவர்.

பெருந்தொகைப்பொருளை ஏழைய பிள்ளைகளை வஞ்சித்து ஒரேபிள்ளைக்குக் கொடுக்கும் இச் சீதனம் என்னும் இத்துர்வழக்கம் நின்றுபோமேயானுல் நம் யாழ்ப்பாணத்தில் ஒவ்வோர் குடும்பத்தவரும் தத்தம் இனம்விட்டு நீங்கி விவாகஞ்செய்ய முயலார்கள். அவ்வாறு பணமும் பணமும் செய்து கொள்ளும் சடங்குகள் நடவாதொழியுமேயாயின் புருஷன் பெண்சாதி ஆகிய இருவர்களுக்கும் ஐக்கியமதிகப்பட்டு விருத்தியாகும்.

பெண்ணானவள் கருப்பவதியாகியிருக்கும் காலங்களில் அப்பெண்ணுடைய சகோதரர்முதலியபேர் அறியாவண்ணம் புருஷன் தன்பேரில் அவளுடைய ஆதனத்தை எழுதுவித்துக்கொள்ளமாட்டான். மூன்று சகோதரிகளுள்ளவிடத்தில் ஒரு பெண் சீதன உறுதியில்லாதிருக்க மற்றிருவரும் சீதன உறுதிமுடிக்கப் பெற்றவரேயாமாயின் அவருள் ஒருபெண் சந்ததியின்றி இறக்கநேரிடில் சீதனகாரியாகியமற்றச் சகோதரிக்கே அப்பெண்சொத்து அடைகின்றது. புருஷனே ஒருவேட்டியுடன்தான்புறப்பட்டுப் போகிறுன்.

இந்தத் துர்வழக்கம் நீக்குவதற்கு உபாயவழிவகைகள் எவ்வாறெனில் ஒருவனுடைய பிள்ளைகள் ஆணுயிருப்பினும் பெண்ணுயிருப்பினும் அவனுடைய ஆதனத்தைச் சரி சரி பங்கிடுபண்ணி பகிர்ந்து கொள்ளவேண்டியது. இதுவுமன்றி, புருஷன் இறப்பின் பெண்ணுக்கு புருஷனுடைய ஆதனத்திற் சரிபாதி அடையவேண்டியது. அப்படியே பெண் இறப்பினும் புருஷனுக்கு அடையவேண்டியது. இவ்விதமான திருத்தம் விரைவில் வெளியாகும். இதனைப் பின்பற்றி எல்லாரும் நடந்துவந்தால் அனேக நன்மையுண்டு.

இவ்வித கொடுமைகளெல்லாம் நிகழுக்காரணம் மேற்கூறிய சீதனமே பணச்சடங்குகளே ஆதலின் இந்தத் துர்வழக்கம்மிகவிரைவில் நீக்கப்படுதல்வேண்டும். கொழும்புமுதலியவிடங்களில் ஒருவன் ஓர் பெண்ணை விவாகஞ்செய்து அப்பெண் அல்லது அந்த ஆடவன் இறந்துபோக நேரிடில் இறந்தவருடைய ஆதனத்தில் சரி அரைவாசி உயிருடனிருக்கும் ஆணுக்கோ பெண்ணுக்கோ அடையும். அப்படி அடையுமாணுல் மேற்சொல்லிய வகையாய்ச் சாதனங்களை ஆடவர்கள் பிறப்பிக்க முயலமாட்டார்கள். நமது தேசவழமைக் கட்டளைச்சட்டத்தை இயன்றவரையிற் திருத்தும்படிக்கும் அட்டேனிஜனறல் அவர்கள் ஸ்ரீமான். இ. பாலசிங்கம் அவர்களைக் கேட்டிருந்தார்கள். தேசவழமை திருத்தச்சட்டம் விரைவில் வெளிவரும். அதில் இத்துர்வழக்கத்தை நீக்கச் சட்டம் ஏற்படும்.

தி. சிவசிதம்பரம்பிள்ளை
திருநெல்வேலி.

# விளாங்குளம்
# சைவப்பிரசங்கம்.

இவ்விடத்துள்ள சைவசமயாபிமானிகளில் ஒருவரும் முன் கச்சேரி முதலியாராகவும் பின் பிரசித்த நொத்தாரிசாகவும் இருந்தவரும், இப்பொழுது கச்சேரிச் சிறுப்பாகவுமிருக்கும் ஸ்ரீ. மாப்பாண முதலியாரவர்களாலும சமயாபிமான சிரேஷ்டராகிய ஸ்ரீ. இராமசேது என்பவராலும் இன்னும் பிறராலும் கட்டுவிக்கப்பட்ட ஒரு திருமடம் ஒன்றுளது இதிலே வருடந்தோறும் கந்தபுராணபடனமும் நடைபெற்றுவருகின்றது.

இந்நாட்களில் இப்பகுதியில் மாட்டுரோகம் அதிகப்படுதலை யறிந்த ஸ்ரீ. மாப்பாணமுதலியாரவர்கள் முதலிய பல கனவான்கள் தங்கள் குலகுருவும், இப்பொழுது இவ்விடத்தில் பிரசித்தநொத்தாரிசு வாகவிருப்பவராகிய பிரமஸ்ரீ. சி. கங்காதரஐயரவர்களின் மைத்துனரும் வடகோவைவாசருமாகிய பிரமஸ்ரீ. சிவகடாட்சக் குருக்களவர்களை அழைப்பித்து, சிவனடியார்களுடைய அடிமைத்திறத்தை இனிது விளக்குவதாகிய "திருத்தொண்டர் பெரியபுராணத்தைச்" சென்ற வருஷம் ஆவணிமாசத்தில் குறித்த மடத்திலே தொடங்குவித்து, ஒவ்வொருநாளும் எல்லோரும் நியமமாக இனிது பாராட்டி மகிழ்ந்து கேட்டுவந்தனர்.

சென்ற ஐப்பசி மீ ௨௨ இரவு குறித்தமடத்தில் சிறுத்தொண்ட நாயனுருடைய சரித்திரம் வாசித்துப் பொருள் சொல்லப்பட்டது. அன்று பொருள் சொல்லியவர் சாவகச்சேரி வாசராகிய ஸ்ரீ. பொன்னம்பலபிள்ளை அவர்களே. அடுத்தநாள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முதல் பிரமஸ்ரீ. சு. சிவகடாட்சக்குருக்களவர்களாலும் மற்றும் பிரபுக்களாலும் யாழ்ப்பாணம் வண்ணைமாநகரத்திலிருந்து அழைப்பிக்கப்பட்டவரும் வித்துவசிரோமணி ஸ்ரீமத். ந. ச. பொன்னம்பலபிள்ளை அவர்களின் மருகரும் மாணாக்கரும் தமிழ்ப்பண்டிதருமாகிய ஸ்ரீ. சிவ. இ. மாரிமுத்து உபாத்தியாயரவர்களால் பொருள் சொல்லப்பட்டது. அதற்கடுத்தஞாயிற்றுக் கிழமை இரவு ஸ்ரீ. மாப்பாணமுதலியாரவர்களுடைய கேள்விப்படி இவ்வூருக்கு ஆவசியமாக ஒரு சைவவித்தியாசாலையும், சைவாலயமும் வேண்டுமென்றும், அதற்கு இவ்வூரார் அழுக்காறு முதலிய துர்க்குணங்கள் இல்லாமல் ஒற்றுமை யுடையவர்களாயிருந்து முயற்சிப்பாராயின் எல்லாம் வல்ல பரமகருணாநிதியாகிய சிவபெருமான் முற்றச் செய்தருளுவர் என்றும் அன்பு இப்படிப்பட்டதென்றும், அவ்வன்பைப்பசுக்களிடத்தன்றிப் பரமபதியாகிய சிவபெருமானிடத்தே வைத்தல் வேண்டுமென்றும், அவ்வன்பினாலே முற் ஜெனனத்தில் பஞ்சபாண்டவர்களுள் ஒருவராயிருந்த அருச்சுனரே மறுபிறப்பில் வேட்டுவகுலத்தில்அவதரித்துக் கண்ணப்பநாயனார் என்னும் பெயருடனே சர்வலோக ஏக நாயகராகிய பரமபதியைப் பூசித்து முத்தியடைந்தார் என்றும் ஓர் அரிய உபந்நியாசம் செய்தனர். அச்சபைக்கு யாழ்ப்பாணத்திலிருந்து உத்தியோகத்தமர்ந்திருக்கும் கனவான்களும் உள்ளூர்க்கனவான்கள் பலரும் சமுகம் கொடுத்தனர்.

புராணபடன முடிவிலன்று சுந்தரமூர்த்திநாயனார் திருக்கைலாசத்துக்கு எழுந்தருளிய வெள்ளானைச்சருக்கத்துக்குக் குருக்களவர்களும் உபாத்தியாயர்அவர்களும் கேட்டோர்அனைவருக்கும், சிவனடியாரிடத்தே அன்பும் ஆராமையும் உண்டாகும்படி பொருள் சொன்னார்கள். சிறுத்தொண்டநாயனார் சரித்திரம் பொருள் சொல்லிய தினத்தன்றும், புராணபடன முடிவிலும் ஸ்ரீ. மாப்பாணமுதலியார், ஸ்ரீ. இராமசேது முதலிய இருவருடைய செலவிலும் பலருக்கு அன்னதானங் கொடுக்கப்பட்டது.

நம்மூர்வாசிகளாகிய சகோதரமணிகாள்! ஸ்ரீ. சிவ. இ. மாரிமுத்து உபாத்தியாயரவர்கள் கூறியவைகள் நமக்கு அவசியம் வேண்டியதே. இதை நாங்கள் ஒற்றுமையுடனும் சிரத்தையுடனும் முயற்சிசெய்துவருவேமாயின் எல்லாம் வல்ல இறைவரது அருளினால் இனிது முடியும். சுபம். சுபம்.

விளாங்குளம் }
6-10-10. }

இங்ஙனம்,
கேட்டு மகிழ்ந்தோன்.

மங்கையர்க்கரசி என்னும்

## கமலாம்பிகைசரித்திரம்.

(௯௧-ம் பக்கத்தொடர்ச்சி.)

### நான்காம் அதிகாரம்.

அற்றைநாட் கழிந்து வைகறையளவும் பள்ளியறையிற் றுயின்ற இருவரும் துயில் நீத்துக் காலைக்கடன் முடித்துச் சிற்றுணா அருந்திச் சந்தோஷமாக வார்த்தையாடிக்கொண்டிருந்தனர். இங்கே அரசன் இவ்வாறிருப்பக் கானகத்தின் இன்னொரு பக்கத்தில் இவ்வரசனை விட்டுப்பிரிந்த சைன்யங்கள் முழுதும் அரசனைத் தேடி அலைந்து அன்னாகாரமில்லாமல் களைப்புற்றுத் தண்ணீர்த்தாக முடையவர்களாய் நெடுந்தூரம் திரிந்து தற்செயலாக அப்பூஞ்சோலையினுள்ளே புகுந்து அங்குள்ள காய் கனிகளை வயிறாரவுண்டு சுனைகளிலுள்ள நீரைப்பருகி உலாவி வரும்பொழுது அவ்விடத்து ஓர் சந்திரகாந்தக் கற்பாறையொன்றிலே, தங்கள் அரசனும் ஒருபெண்மணியும் சம்பாஷித்திருத்தலைக்கண்டு, அதிசயமுடையவராய் அவனுக்கு மரியாதைசெய்து. அரசர்பெருமானே! நாங்கள் நேற்று முழுவதும் தங்களைத் தேடித்திரியாதவிடம் இல்லை. இங்கு எவ்வாறுவந்தீர்கள் இப்பெண்மணி யாரோ? என்று வினவுதலும் அவனும் சைன்யங்களை விட்டுப்பிரிந்தது முதல் சந்தித்தது வரையிலுமுள்ள சகல சம்பவங்களையும் சொல்லி எனது அருமையான சைன்யங்களே! நான் இவளைக் காந்தருவமணம் புரிந்தேன். இனிமேல் இவள்தான் உங்கள் இராணி என்று கூறிச் சைனியம் சூழ அவளையும் அழைத்துக்கொண்டு தன் நகரம் போனான்.

வாசகர்களே!

ஒருவாற்றானும் குற்றமில்லாதவனாகிய வீரவிக்கிரம மகாராசனிடம் சனீச்சுரன்வந்து புகுந்த விந்தையே விந்தை!.

இவன் சனியனின் மகிமையினால், தன் புத்திமாறி கேவலம் தாசிப்பெண்ணின் மாய வலைக்குட்சிக்கி அவளை இராணியாக்கிக் கொண்டுவந்து தனது அரண்மனையில்வைத்துத் தனக்கும் கதாநாயகியாகிய கமலாம்பிகைக்கும் என்றைக்கும் தீராத பழியையும் துயரத்தையும் வருவித்துக்கொண்டான். இவைகளெல்லாவற்றிற்குங் காரணம் கருமமேயாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குமாரசுவாமிப்புலவர் நூலகம்
புலவகரகம்,
மயிலணி : : சுன்னாகம்,
இலங்கை.

"காமமேகொலைகட்கெல்லாங்காரணங்கண்ணோடாத, காமமேகளவுக்கெல்லாங்காரணங்கூற்றுமஞ்சும், காமமேகள்ளுண்டற்குக்காரணமாதலாலே; காமமேநரகபூமிகாணியாக்கொடுப்பதென்றான்.

கண்டதோர்நறவமேகாமமேயென
வெண்டருதீப்பொருளிருமைத்தென்பரால்
உண்டிடிழியழிக்குமென் றுணர்வையுள்ளமேற்
கொண்டிடிழியுயிரையுங்கொல்லுமென்றரோ.

உள்ளினுஞ்சுட்டிடுமுள்ளுருங்கேள்வியிற்
கொள்ளினுஞ்சுட்டிடுங்குறுகிமற்றதை
தள்ளினுஞ்சுட்டிடுந்தன்மையீதினாற்
கள்ளினுங்கொடியதுகாமத்தீயதே.

சுட்டுறுபிறவியும்வினைகள்யாவையுங்
காட்டியதினையதோர்காமமாதலின்
வாட்டமில்புந்தியால்மற்றதன்கோயினை
வீட்டினரல்லவோவீடுசேர்ந்துளார்."

என்று ஆன்றோர்கள் கரதலாமலகம்போலக் காட்டியிருக்கின்றார்கள். காமமே எல்லாக்கேட்டிற்குங் காரணமாகும். இதன் வசப்பட்டவர்களுக்கு ஒருகாலத்தும் மீட்சியில்லை.

முன்னையுகங்களில் அறக்காட்டரசனாகிய தேவேந்திரன், அழகிற்சிறந்த தன் கடிமனைக்கிழத்தியாகிய இந்திராணி இருப்பவும் கௌதம முனிவருடைய பத்தினியாகிய அகலிகை யென்பாளைப் புணர்ந்தமையினாலன்றோ, சரீரத்தில் இழிவாகிய ஆயிரம் பெண்யோனிவடிவங்களைத் தான் செய்த அடாப்பழிக்கு இலச்சினையாகப் பெற்றுக்கொண்டான். எல்லாவற்றானும் பெருமையுடையவனாகிய சந்திரனென்பான் பத்தினிகளாகிய இருபத்தேழு தேவமகளிர்களிருப்பவும், பிறன்மனைவியும் தன் குருபத்தினியுமாகிய தாரையென்பாளைக் காமமயக்கத்தினாலே புணர்ந்து, குருவின் சாபத்தையும் கன்மநோயாகிய க்ஷயரோகத்தையும் அடைந்தான். பிரமதேவர் வாக்குக்குத் தலைவியாகிய சரஸ்பதி மனைவியாக இருக்கவும் காமமயக்கத்தினாலே தன்னாற் சிருஷ்டிக்கப்பட்ட திலோத்தமையைப்புணர எத்தனிக்கும்போது அவள் பெண்கிளிவடிவங்கொண்டு மறைந்தோடத் திசைமுகன் ஆண்கிளிவடிவங்கொண்டு தொடர்ந்து பிடித்துப் புணர்ந்து, எவராலும் இழித்துரைக்கப்பட்டுத் தீராப்பழியையடைந்தார். மகாவிட்டுணு செந்தாமரைமலராசனியாகிய திருமகள் தன்னைவிட்டு நீங்காதிருப்பவும் சலந்தராசுரனுடைய மனைவியாகிய விருந்தையென்பாள் பிறன் மனையாள் என்பதைக் காமமயக்கத்தினால் உணராது மயங்கித் தன்னுடைய வாசற்காவற்காரர் இருவராலே விருந்தையின் நாயகனை சலந்தரனுடைய பிளவுபட்டுக்கிடந்தவுடலை எடுப்பித்துப் பொருத்தி மாயையினாலே தான் அதனுட்பிரவேசித்து, அவளைப் புணர்ந்தபோது அவள் எல்லாவற்றையும் உள்ளபடி அறிந்து அவருடைய வாசற்காவற்காரர்களைப்பார்த்து நீங்கள் அடுத்துவரும் மூன்று பிறவிகளில் விட்டுணுவுக்குச் சத்துருக்களாகி அலைந்து உலையக் கடவீர்கள் என்று கூறினாள். (இவர்கள்தான் இரணியன், இரணியாக்ஷன், இராவணன், கும்பகன்னன், சிசுபாலன், தந்தவக்கிரன்.) பின் விட்டுணுவைப்பார்த்து நீர் மானிடஜனனம் எடுத்து அரசவம்சத்திற் பிறந்தும் உமக்கு வரற்பாலதாகிய அரசுரிமையையும் இழந்து, கைப்பிடித்த மனையாளோடு, காடே கதியாகப் போய் அவளைப் பறிகொடுத்துக் குரங்குகளுடனே காட்டில் அலைந்து உலைந்து திரியக்கடவீர் என்று சபித்தாள்.

காம மயக்கத்தினாலே தேவர்கள் கதியே இவ்வாறாயின் காமத்திற் கொடியது பிறிதில்லை. இன்னும்; அசுரராசனாகிய சூரபன்மா பல்லாயிர வருடங்களாக அரியவீரயாகஞ் செய்து சிவபெருமானிடத்தே பெற்றுக்கொண்ட ஆயிரத்தெட்டுஅண்டங்களையும் நூற்றெட்டு யுகங்காறும் அரசுசெய்து பெறுதற்கரிய பாசுபதாஸ்திரம் பெற்று வச்சிரயாக்கையுடன் அரிபிரமேந்திராதி தேவர்களெல்லாம் சதாகாலமும் இராஜாதிராசனே தேவரீர் நீடூழிவாழ்கவென வாழ்த்தும் ஆசி மொழிகளையும் பிறன் மனையாளாகிய இந்திராணியைக் காமித்தலினாலே இழந்தான். இராவணன் சீதாபிராட்டி என்னும் கற்பாக்கினியைக் கொண்டுபோய்க் கெட்டநோக்கத்தோடு இலங்கையிற் சிறைவைத்து வருத்தினமையினால் இந்திரசித்து முதலிய புத்திரரையும் துணைவரையும் இலங்கை யரசையு மிழந்து மடிந்துபோனான். காசிபமுனிவர் மாயையுடனே மதனசாஸ்திர விதிப்படி ஒருநாளிரவு கலந்து புணர்ந்து அவள் விட்டு நீங்கியவுடன் காமமயக்கத்தினாலே பூமியின்மீது வீழ்ந்து புரண்டு புலம்பித் தேற்றுவாரொருவர் இன்றிக்கிடந்தபோது பிதாவாகிய பிரமதேவர்வந்து தேற்ற ஒருவாறு தேறியிருந்தார். இனி பூலோக அரசர்களாகிய கீசகன் சயித்தவான் என்னும் இருவரும் தீண்டா நெருப்பாகிய திரௌபதியை ஓர்கால் விரும்பிச் சோராவாரி செய்தமையினால் வீமனாலும் அருச்சுனனாலும் தங்களுயிருக்கு இறுதியைத் தேடிக்கொண்டார்கள். பதிவிரதா சிரோமணியாகிய தமயந்தியைத் தீண்டிப் புணர எத்தனித்த வேடன் அவளது கற்பாக்கினியினால் எரிந்து சாம்பராயினான். இன்னுந் தேவர்கள் அசு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ரர்கள் முனிவர்கள் மனிதர்கள் முதலியவர்கள் காமத்தினால் உழன்று வருந்தி இடர்ப்பட்டோர் பலருளர். இதுபற்றியன்றோ:—

"கானகத்திற்சனகிமேலாசைகொண்டதால்
கண்ணிழந்தான்சயந்தன்
கபடசன்யாசிதசமுகனுமச்சிறைகொண்டு
கட்டோடுபட்டுவீழ்ந்தான்
தீனையொர்துரோபதையைமோகித்தகீசகன்
சேர்துணைவரொடுமிறந்தான்
தேவர்கோனகலிகையைமேவியுடலெங்கணும்
தெரிவைமார்குறிபடைத்தான்
மானமிகுமரசனளன்மனைவியைவிரும்பியே
வனசரன்சாம்பரானான்
வளர்சந்திரன்குருவின்மனைவியைப்புணர்ந்ததால்
வடிவுதடுமாறலானான்
வானவர்களாயினும்பரதாரகமனத்தை
வைத்திடிற்கெடுவர்கண்டாய்
வரைராசகுமரிமடிமீதில்விளையாடல்புரி
மணிகொண்டவடிவேலனே."

என்று ஒருமேதாவியார் கூறியிருக்கின்றனர். இன்னும் இவைகளை விரித்துக்கூறில் விரியுமென்றஞ்சிக் கதையைக் கூறத் தொடங்குகின்றேன்.

---

## ஐந்தாம் அதிகாரம்.

தான் கண்ட ஆடவர்களையெல்லாம் தன் கைக்குட் சிக்குமாறு செய்யும் சாதுரியமுடைய செங்கமலம் என்னும் கொடுசீலியானவள், என்மீது ஒருகாலத்தும் நீங்காத அன்புடைய தந்தையார் என்னைவெறுக்கும்படி அவருக்கு வசிய மருந்திட்டு மயக்கித் தன்வசமாக்கிக்கொண்டனளே. அந்தோ! சிவனே! சற்றேனும் இரக்கமில்லாத கொடிய பாவியிடம் என்னைக் காட்டிக்கொடுத்துவிட்டீரே, நான் இனி யாரை நோவேன், என்னை நோவேனோ. எனது விதியை நோவேனோ, எனது பிதாவின் கேடுகெட்ட கொடிய மதியை நோவேனோ. காதகி சிற்றன்னையின் சதியை நோவேனோ. ஈசா! என்னை ஏன் இன்னும் உயிரோடுவைத்திருக்கின்றீர் என்று பலவாறு கூறிக் கருங்கல் மனமும் உருகுமாறு ஒரு கன்னிகையானவள் தனது பூஞ்சோலையிலே புலம்பிக்கொண்டிருந்தனள்.

வரும்.

மா. சிவராமலிங்கம்பிள்ளை
ஆறுமுகநாவலர்வாசிகசாலை
வண்ணார்பண்ணை.

---

## சமாசாரம்.

மல்லாகம்கோடு:—மல்லாகம்கோட்டை எடுத்து யாழ்ப்பாணம் பொலிஸ் நீதிபதியே ஊர்காவற்றுறைக் கோட்டு வேலையையும் பார்த்துவரும்படி கவண்மேந்தார் தீர்மானித்திருக்கின்றனராம். ஆனால் கிராமவாசிகளான எதிரி வழக்காளிகளுக்கு வசதிக்குறைவையும் அலைச்சலையும் உண்டாக்கும். இதைக் குறித்து றிச்வே மண்டபத்தில் ஓர் மகாசபைகூடி மகத்துவ தேசாதிபதியவர்களுக்கு விண்ணப்பம் அனுப்பப்பட்டிருக்கின்றது.

உத்தியோகமாற்றம்:—பருத்தித்துறை சாவகச்சேரிப் பொலிஸ் நீதிபதியாகிய மெஸ் வீரக்கோனவர்கள் குருநாக்கலுக்கு மாற்றப்பட இவரது இடத்திற்கு ஊர்காவற்றுறைப் பொலிஸ் நீதிபதி மெஸ் அழகைக்கோனவர்கள் நியமனமாவரெனக்கேள்வி.

சுப்பிறீங்கோட்டு நீதிபதிகள்:—இலங்கைச் சுப்பிறீங்கோட்டு நீதிபதிகளில் ஒருவராகிய கௌரவ. உவென்ற் அவர்கள் இளைப்பாறிவிட்டனர். மற்றொரு நீதிபதியாயிருந்து லீவிற்சென்றிருந்த கௌரவ உவூட்றென்றனவர்கள் இனிமேல் இலங்கைக்கு வரமாட்டாரெனக் கதை நிகழுகின்றது.

தேசாதிபதி லீவிற் செல்லுவாராம்:—எங்கள் மகத்துவந்தங்கிய தேசாதிபதி சேர் ஹென்றி மெக்கலம் அவர்கள் வருகிற மேமீ வரையில் லீவிற் சீமைக்குச் செல்லுவாராம்.

டிஸ்திறிக்கோடு:—சமன்செய்து சீர்தூக்கி நீதிகோடாது கடமை பார்த்துவந்த டிஸ்திறிக் நீதிபதி மெஸ். தெயினவர்கள் கொழும்பு றெக்குவெஸ்துக்கோட்டு நீதிபதியாகச் செல்ல இவரது இடத்திற்கு மெஸ் பின்றோ அவர்கள் நியமனவாரெனக் கதை நிகழுகின்றது.

வண்ணார்பண்ணைத் தபாலாபீஸ்:—சிலவருடங்களுக்கு முன் இவ்வூரார் வெகு பிரயாசைப்பட்டுக் காருண்ணிய கவண்மேந்தாருக்கு விண்ணப்பம் அனுப்பி வேண்டிக்கொள்ளக் கவண்மேந்தாரால் தொடங்கி நடைபெற்று முதன்மையடைந்து ஊரவர்களுக்கு வசதியையும் கவண்மேந்தாருக்குப் போதிய வருமானத்தையும் கொடுத்துவந்த இக்கந்தோரைக் கொக்குவிலில் கொண்டுபோய் வைத்து நடத்துவதற்கு கனம்பொருந்திய போஸ்மாஸ்றர் ஜெனறலவர்கள் தீர்மானித்திருப்பதாக அறிகின்றேம். வண்ணார்பண்ணையிலேயே வியாபாரிகளும், பத்திரிகை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நடத்துபவர்களான அச்சுக்கூடக்காரர்களும் மற்றும்சகலரும் ஏராளமாக இருக்கின்றனர். இதனுண்மை இவ்வூராரால், இக்கந்தோரில் நடைபெறும் வேலைகளின் பெருக்கத்தால் இனிது விளங்கும். இதைக்குறித்து போஸ்மாஸ்றர் ஜெனறலவர்களுக்கு விண்ணப்பம் அனுப்பியிருக்கின்றார்கள்.

புதியவீமாக்கம்பனி:—இந்தியாவிலுள்ள மகாராசாக்களும் கோடீஸ்வரர்களும் சேர்ந்து ஒரு கோடிரூபா மூலதனம் சேர்த்து ஒருவீமாக்கம்பனியைத்தொடங்கி நடத்திவருகின்றார்கள். இதற்குச் சபாநாயகர் காசிம்பசார் மகாராஜா மனீந்திரசந்திரநந்திபகதூர்அவர்கள், இதன் தலைமைக்கந்தோர் கல்கத்தாவில் டல்ஹவுஸ் சந்தி ௩0ம் நம்பர் கட்டடத்தில் தாபிக்கப்பட்டிருக்கின்றது. இந்தச் சங்கத்தில் நூறுரூபா முதற்கொண்டு எவ்வளவு பெருந்தொகைக்கும் பொருந்திக்கொண்டு உரிய வீதப்படி கட்டிவரலாம். சிலகாலங்களிலே கட்டத் தவறினும் நஷ்டமாகாது. இதுதான் பெருஞ்சிலாக்கியம். இதற்கு ஸ்ரீ. (எஸ். கே லோற்றன்) கனகரெத்தினம்அவர்கள் இலங்கை முழுவதற்கும் ஏசண்டாகநியமிக்கப்பட்டிருக்கின்றனர்.

பாரதிபாஷ்ய வித்தியாசாலை:—இந்தக் கார்த்திகைமீ ௧௮௳ பெரியகடைத்தெரு வேம்படிவிநாயகராலயத்துக்குப் பக்கத்தேயுள்ள இவ்வித்தியாசாலையில் பரீட்சையிற் சித்தியடைந்த பிள்ளைகளுக்கு உபகாரங்கள் கொடுக்கப்பட்டன. பிறக்கிராசியார் ஸ்ரீ. வி. காசிப்பிள்ளை அவர்கள் அக்கிராசனம் வகித்திருந்தார்கள்: ஸ்ரீ. (எஸ். கே. லோட்டன்) கனகரத்தினமவர்களும், பிறக்டர் ஸ்ரீ. ஆ. கதிரைவேற்பிள்ளை அவர்களும் ஸ்ரீ சிவ. இ மாரிமுத்து உபாத்தியாயரவர்களும் இந்துகாலேஜ் தமிழ்ப்பண்டிதர் ஆ. மு. சோமாஸ்கந்தபிள்ளை அவர்களும் பிரசங்கஞ் செய்தார்கள் இவ்வித்தியாசாலை உபாத்தியாயர்கள் கல்வி கற்பிப்பதில் எடுத்துக்கொண்ட பிரயாசம் எவராலும் நன்கு பாராட்டப்படத்தக்கதே

கயமுகசம்மாரமகோற்சவம்:—இம் மகோற்சவம் நல்லூர்க் கைலாசபிள்ளையார் கோயிலில் இந்தக் கார்த்திகைமீ ௨௯௳ செவ்வாய்க்கிழமை, முதல் தசமுகாசுரசம்மாரமும் அதன்பின் கயமுகாசுரசம்மாரமும் நடைபெற்றது. இதை நடத்தியவர்கள் வண்ணைச் சைவப்பிரகாசவித்தியாசாலை மனேஜர் ஸ்ரீ. த. கைலாசபிள்ளை அவர்களே. இவர்கள் இவ்விக்கினேஸ்வராலயத்தில் நடத்திய இம்மகோற்சவம் ஏனைய ஆலயங்களிலும் நடந்துவரின் அங்கங்குள்ள அடியார்கள் விக்கினேஸ்வரப் பெருமானுடைய திருவருளைச் சிந்தித்தற்கு ஏதுவாகுமன்றோ.

சங்காபிஷேகம்:—இந்தக்கார்த்திகை மீ ௨௰௳ சோமவாரத்தன்று வண்ணை ஸ்ரீ. வைத்தீஸ்வரசுவாமிக்கும் ஸ்ரீ.வாலாம்பிகைக்கும் மகா சங்காபிஷேகமும் உற்சவமும் ஆகம விதிப்படி பிரமஸ்ரீ. ஆ. சண்முகரத்தினையரவர்களுடைய உபயத்தால் வருஷந்தோறும்நடத்தப்பட்டுவருதல்போல இவ்வருஷமும் நடத்தப்பட்டன. கீரிமலையிலும் ஸ்ரீ. நகுலாம்பிகாசமேத நகுலேஸ்வரசுவாமிக்கும் மகா சங்காபிஷேகமும் உற்சவமும் கொழும்பில் சிறுப்புத்தியோகத்தோடு ஜே. பீ. பட்டம்பெற்ற ஸ்ரீமத். க. ஞானசேகரம்பிள்ளை அவர்கள் உபயத்தால் நடத்தப்பட்டன. இதுவன்றே பெரும் சிவபுண்ணியம். கடிதன்.

ஓர் புதிய வித்தியாசாலை:—பிரக்கிராசியார் ஸ்ரீ. வி. காசிப்பிள்ளை அவர்களால் இங்கிலீஷ் தமிழ் என்னும் இருபாஷைகளும் கற்பிக்கப்படும் வித்தியாசாலை ஒன்று சிவியபுரியில் இந்தக் கார்த்திகை மாசம் ௧௪௳ ஆரம்பிக்கப்பட்டது. இது ஸ்ரீ. பார்வதி வித்தியாசாலையென அழைக்கப்படும். இது ஓங்கிவளர எம்பெருமான் திருவருள் பாலிக்கருளுக.

களவு:—இந்தக் கார்த்திகைமீ ௨௨௳ கோப்பாய்ச் சந்தையிலிருக்கும் கடைகளுள் ஒன்றின் சுவரை இடித்துச் சில கள்வர்கள் உட்புகுந்து களவாடிவிட்டனராம்.

சைவசித்தாந்தமகாசமாஜம்:—வருகிற மார்கழி மாசம் ௨௰, ௨௧, ௨௭ம் திகதிகளில் இராமநாதபுரத்தில் சமஸ்தான வேந்தரின் அனுசரணையின்கீட்கூட்டப்படும் இம்மகாசபைக்கு அபிமானிகளை அனுப்பவும் மற்றும் வேண்டுவனவற்றைச் செய்வித்தற்பொருட்டும் ஸ்ரீ. முன்சீப் ஜே. எம். நல்லசாமிப்பிள்ளை அவர்கள் பலஇடங்களிலும் சென்று கனவான்களைக் கண்டு கலந்து வருகின்றார்கள். இச்சபைக்குக் காரியதரிசியாகச் சித்தாந்ததீபிகைப் பத்திராதிபர் பிரமஸ்ரீ. வி. வி. ரமணையர் எம். ஏ. அவர்கள் நியமிக்கப்பட்டிருக்கின்றார்கள். அவர்களால் வேண்டுவனயாவும் இப்பொழுதே ஆரம்பித்து நடத்தப்பட்டு வருகின்றன. எங்கள் ஞானசித்திப் பத்திராதிபர் ஸ்ரீமத். சி. தாமோதரம்பிள்ளை அவர்களும் இதன்பொருட்டு இராமநாதபுரத்துக்குப் போவார்களெனக் கேள்வி.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

புதிய இராசப்பிரதிநிதி:—இந்தியாவின் புதிய இராசப்பிரதிநிதியாகிய லோர்ட் ஹார்டிங்ஸ் பிரபுவும் அவர் மனைவியாரும் இந்தக் கார்த்திகை மீ கஅஉ இந்தியாவுக்கு வந்து தமது உத்தியோகத்தை ஏற்றுக்கொண்டனர்.

ஒருகருப்பத்தில் ஆறுகுழந்தைகளைப்பெற்றாள்:- திருநெல்வேலிச்சில்லாவிலே பெரும்பொள்ளாச்சி என்னும் இடத்தில் வசிக்கும் ஒருபெண், ஒருகருப்பத்தில் ஒரு ஆண்குழந்தையும் ஐந்து பெண்குழந்தைகளையும் பெற்றனளாம். பிள்ளைகள் உடனே மோசம்போயினவாம்.

ஆச்சரியப்பிறவி:—இந்தியாவைச் சேர்ந்த குன்னத்தூர் என்னும் இடத்தில் வசிக்கும் ஓர்பெண், இரண்டுதலையும் இரண்டுமூக்கும் நாலுகண்ணும் நாலுகாதும் நாலுகையும் ஒரேமார்புமுடைய ஒரு குழந்தையைப் பெற்றனளாம். ஆனால் பிள்ளை உடனே இறந்துவிட்டதாம்.

ஓர் இரத்தின வியாபாரசாலை:- இது வண்ணார்பண்ணையிலே பெரியகடைத்தெருவிலே ஸ்ரீ. வை. வல்லிபுரமவர்களால் பெருந்தொகைமுதல்கொண்டு தொடங்கி நடத்தப்பட்டுவருகின்றது. இதிலே இரத்தினாபரணங்களும், பொன்னாபரணங்களும், நவரத்தினங்களும் வலம்புரிச்சங்குகளும் பிறவும் விற்கவும் வாங்கவும்படுகின்றன. விற்கும்பொழுதும் வாங்கும்பொழுதும் எம்மூரவர்களுக்கு மனதிலெழும் பயமும் சந்தேகமும் எள்ளளவும் இங்கே தோன்றமாட்டா. எவ்வித தந்திரோபாயங்கள் ஒன்றும் இங்கே இல்லை. இங்கிலீஷ்கம்பனிகளிற்போல உண்மையும் நிதானமும் நடுவுநிலைமையும் ஒருசிறிதும் தவறுதலில்லை. ஒருவிவாகம் சாத்திரப்பிரகாரம் நிச்சயிக்கப்படின், உடனே கேசாதி பாதாந்தம்வேண்டும் ஆபரணங்களெல்லாம் ஒன்றும் தவறாது வாங்குதற்கு எப்பொழுதும் ஆபத்தமாயிருக்கின்றன. இப்படியொரு ஆபரணசாலை எம்மூரிலே வேறெங்குமில்லை. ஸ்ரீ. வை. வல்லிபுரமவர்களோ புதிதாகக்கட்டுவித்தும் புதுக்கியும் உள்ள தரும சத்திரமும் மடங்களும் தருமகூபங்களும் குளங்களும் இடங்கடோறும் மிகப் பலவாம். பெரியகடைச் சந்தியிலிருக்கும் கங்கா சத்திரமும் இவர்கள் கட்டுவித்ததேயாம். அச்சிவபுண்ணியங்கள் போல, இவ்விரத்தினசாலைத் தாபனமும் பெரும் புண்ணியச்செயல் என்றே நாம் துணிந்து சொல்வோம். ஏனெனில், சனங்கள்முன்போல் வியாபாரிகளாலும், பொன்வினைஞர்களாலும், வஞ்சிக்கப்படுதலின்றி உள்ளவாறு வாங்கவும் விற்கவும் இவ்விரத்தினசாலை காரணமாயிருத்தலினால் என்க. ஆதலால் இவ்விரத்தின சாலாதிபர்கள் தொடங்கி நடத்திவரும் புண்ணிய முயற்சிகள் யாவும் மேன்மேலும் அபிவிருத்தியாகிவரும்படி சிவபிரான் திருவருள் பாலித்துந் தருமசிந்தையுள்ள இச் சாலாதிபர்களைக் காத்தருளுக.

# பத்திரிகைகளின் வரவு.

## இந்துசாதனம்.

இது யாழ்ப்பாணத்தில் இப்பொழுது நின்றுலவும் பத்திரிகைகளுள் பழமையும் முதன்மையும் பெற்றுடையது. சைவபரிபாலன சபையாரால் நடத்தப்படுவது. இதன் பத்திராதிபர் ஸ்ரீ. பெ. கார்த்திகேயபிள்ளை அவர்களே. இவர்கள் நீடித்த அனுபவமுடையவர்கள். ஆதலால் இதில் இவர்களால் எழுதப்படும் விஷயங்கள் அவ்வக்காலங்களுக்கேற்ப, அரசாட்சியாரால் கொண்டுவரப்படும் சட்டங்களும் பொது நன்மைக்குரியனவுமாகவே இருக்குமென்று நாம் சொல்லிக்காட்ட வேண்டுவதில்லை. இதிலெழுதப்பட்டுவரும் கடிதங்களும், இதோபதேசம் முதலியனவும் சாஸ்திரவிஷயங்களும் மதவிஷயங்களும் இலக்கியவாராய்ச்சியும் பிறவுமாக கற்றோர்க்கும் மற்றோர்க்கும் நல்லறிவினையூட்டி நல்லொழுக்க வழிப்படுத்தும் பண்பினவாகும். இன்னும் தம் பத்திரிகையின் கையொப்பநேயர்களென்று மற்றைப் பத்திராதிபர்களால் எண்ணப்பட்டவர்களெல்லாம் இவ்விந்துசாதனத்திற்கே முதலுரிமை பூண்டிருக்கின்றார்கள். மற்றைப் பத்திரிகைகளின் பொருட்டுக் கொடுக்கப்படும் கையொப்பப்பணம் பத்திராதிபர்களுக்கே உரியனவாகின்றன. இதன் கையொப்பப்பணமோ சமயபரிபாலனமாகிய பெரும் சிவபுண்ணியத்தின்பொருட்டே செல்கின்றது. ஆதலால் சைவசமயத்தவர்க

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ளாகிய நம்மவர்கள் அனைவரும் கையொப்பநேயர்களாகிக் கடமைபூண்டொழுகும் கடப்பாடுடையர்களாகும். சைவபரிபாலனசபைக்கும் இப்பத்திரிகையின் மனேஜர் ஸ்ரீ. சி. கந்தையாபிள்ளைஅவர்கட்கும் பத்திராதிபர்வர்கட்கும் தமிழுலகம் கடமைப்பட்டுள்ளதே.

## குருசந்திரோதயம்.

இது யாழ்ப்பாணம் வண்ணார்பண்ணையிலிருந்து மாதம் இருமுறை வெளிவரும் ஓர் தமிழ்ப்பத்திரிகை. இதிற் பற்பல அரிய விஷயங்களும் சமாசாரங்களும் எழுதப்படுகின்றன. இன்னும் விரதமகிமைகளும் சிவபுண்ணிய கால விசேஷங்களும் இவை போல்வன பிறவும் வெளிவருகின்றன.

## சன்மார்க்கபோதினி.

இது யாழ்ப்பாணம் அச்சுவேலியிலிருந்து மாதம் இருமுறை வெளிவரும் ஓர் தமிழ்ப்பத்திரிகை. இதில் வைத்திய விஷயங்களும் சமாசாரங்களும் பிறவும் எழுதப்படுகின்றன. இது யாழ்ப்பாணத்தில் நெடுங்காலமாக நடந்துவருகின்றது.

## சித்தாந்ததீபிகை.

இது சென்னைமாநகரத்திலிருந்து ஆங்கிலேய பாஷையில் புத்தகரூபமாகவெளிவரும் ஓர் மாதாந்தப்பத்திரிகை. இடப்பட்ட பெயருக்கு ஏற்ற விஷயங்களடங்கப்பெற்றது. இளமையில் ஆங்கிலேய வித்தியாப்பியாசஞ்செய்து அதில் வல்லவர்களாய்த் தமிழ்க்கல்வியும் சமயநூலுணர்ச்சியுமில்லாத எம் சகோதரர்களுக்கும் ஐரோப்பியபண்டிதர்களுக்கும் இன்றியமையாது வேண்டப்படும் பிரதான சாதனமாகும். ஆகமாந்தங்களாகிய சைவசித்தாந்தநூல்களும் அந்நூல்களிலுள்ள நுண்பொருள்களும் தெளிவுபெற மொழிபெயர்க்கப்பட்டுவருகின்றது. இவ்வாறு மொழிபெயர்த்து இப்பத்திரிகைக்கு விஷயதானஞ்செய்வோர்களது லோகோபகாரத்திற்கு எவர்களும் கடமைப்பட்டவர்களேயாம். இதன் பத்திராதிபர் பிரமஸ்ரீ. வி. வி. ரமணையர் எம். ஏ. அவர்கள். இவர்கள் சைவசித்தாந்த மகாசமாசத்தின் காரியதரிசி. சிதம்பரம் சைவப்பிரகாசவித்தியாசாலைப் புதுக்கட்டிடப்பிரவேச சபையில் ஆகமத்தின் ஞானபாதத்தைக்குறித்து ஆங்கிலத்திலே உபந்நியாசஞ் செய்தவர்கள் இவர்களேயாம்.

## சிலோன்பேட்ரியற்

இது யாழ்ப்பாணத்திலே மாதம் நான்குமுறை ஆங்கிலபாஷையிலே வெளிவருவது. இதில் எழுதப்படும் பாஷாநடை, இனிமையும் தெளிவும் காட்டிச்செல்லும் பெரும் சிறப்புவாய்ந்துள்ளது. இதில் பொதுநன்மைக்கும் அறிவுவளர்ச்சிக்கும் வேண்டும் பற்பல அரிய விஷயங்களும் வர்த்தமானங்களும் மிகவிரிவாக எழுதப்பட்டு வருகின்றன இதன்பத்திராதிபர் பிறக்றர் ஸ்ரீ. கனகரெத்தினம் அவர்களாகும். இவர்கள் பத்திராதிபராயிருத்தலினால் சட்டவிரோதங்கள் இவை இவை யென்பதும் புதிதாக ஏற்படும் சட்டங்கள் இவை இவை என்பதும் பிறவும் இப்பத்திரிகையில் காலங்கள் தோறும் தவறாது வெளிவருமென்பது நாம் சொல்லவேண்டியதில்லை.

## சுதேசநாட்டியம்.

இது யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த வயாவிளான் என்னும் இடத்தினின்றும் மாதமிருமுறை வெளிவரும் ஓர் தமிழ்ப்பத்திரிகை. இதில் எவர்களுக்கும் உபயோகமாகும் பலநல்விஷயங்களும் சுதேசவர்த்தமானங்களும் பிறதேச வர்த்தமானங்களும் பிறவும் காலந்தோறும் வெளிவருகின்றது. இதன் பத்திராதிபர் ஸ்ரீ. க. வேலுப்பிள்ளை அவர்களே. ஆனால் இப்பொழுது அவர்கள் தெய்வாதீனமாக விலகவேண்டியிருந்ததினால் ஸ்ரீ சி. நல்லதம்பி அவர்களை பத்திராதிபராகவிருந்து நடத்திவருகின்றார்கள். இவர் நீடித்த அனுபவமும் காரியங்களை அறிந்து நடத்தும் திறமையுமுடையவர்.

## சைவகுக்குமார்த்தபோதினி.

இது யாழ்ப்பாணத்தைச் சார்ந்த வேலணையினின்றும் வெளிவரும் ஓர் மாதாந்தத் தமிழ்ப்பத்திரிகை. இது கொண்டதன் பெயருக்கேற்பச் சைவசித்தாந்த நூல்களின் உட்கிடைப் பொருள்களையும் வேதசிவாகமங்களின் இயல்புகளையும் சிவதீக்ஷாக்கிரமங்களையும் சரியை ஆதி நான்கின் திறங்களையும் சைவர்களுக்கு வேண்டுந்திரிபதார்த்த லக்ஷணங்களையும் எவர்க்கும்புலப்பட இனிய நடையில் விளக்கும் இயல்பினையுடையது. சமாசாரங்களும் எழுதப்படுகின்றன.

## சைவபாலியசம்போதினி.

இது யாழ்ப்பாணத்து வட்டுக்கோட்டை கிழக்கு, சைவ ஆங்கிள வித்தியாசாலையிலே நடத்தப்படும் சைவபாலிய சமாசத்தினின்றும் மாதம் இருமுறை வெளிவரும் ஓர் தமிழ்ப்பத்திரிகை. இதில் சைவசமயத்தின் இயல்களும் முப்பொருள்களின் இயல்புகளும் அரிய வியாசங்களும் வர்த்தமானங்க

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ளும் பிறவும் அமைந்துள்ளன. பத்தியைவிளக்கும் சரித்திரங்களும் இடையிடையே எழுதப்பட்டு வருகின்றன.

## ஞானசித்தி.

இது யாழ்ப்பாணத்தினின்றும் மாதம் இருமுறை வெளிவரும் ஓர் தமிழ்ப்பத்திரிகை. இதில் பரமபதியாகிய சிவபெருமானுடைய இயல்புகளையும் அவர் ஆன்மாக்களுடைய பக்குவாபக்குவங்கள் நோக்கி அருளிய சமய பேதங்களினியல்புகளையும், பசுபாசங்களின் லக்ஷணங்களையும் புண்ணிய பாவங்களினியல்புகளையும் இம்மை மறுமை இன்பங்களின் திறங்களையும் பதமுத்தி பரமுத்திகளின் தன்மைகளையும் அவற்றையடையும் வாயில்களையும் சிவஞானபோதம்முதலிய சைவசித்தாந்த நூல்களின் உண்மைப் பொருள்களைத்தழுவி முதனூல்களோடு முரணாது தமிழுலகிற்கு உபதேசித்து உபகரிக்கும் கல்வி வளம்வாய்ந்துள்ளது. இவைகளோடு சமாசாரங்களும் காணப்படுகின்றன. இதன் பத்திராதிபர் வித்துவான் ஸ்ரீ. சி. தாமோதரம்பிள்ளை அவர்களே. இப்பத்திரிகை சைவசமயிகள் ஒவ்வொருவராலும் வாசித்தற்குரியது.

## பாலசந்திரன்.

இப்பெயர்கொண்ட தமிழ்ப்பத்திரிகை இலங்கையின் இராசதானியாகிய கொழும்பினின்றும் மாசம் நான்குமுறை வெளிவருகின்றது. இதில் எவர்க்கும் வேண்டும் இதோபதேசங்களும் முன்னுள்ள கவிஞர்களின் சரித்திரங்களும் கடவுளின் இயல்புகளும் எழுதப்படுகின்றன. சுதேசவர்த்தமானங்களும் பிறதேச வர்த்தமானங்களும் நிறைந்துள்ளன. இதன் பத்திராதிபர் எவ்வளவு அனுபவம் உடையவரென்பதும் உலக நன்மைக்குரிய விஷயங்களில் அவர்கள் மனம்செல்லும் அருமையும் விஷயங்களையாயினும் அன்றி வர்த்தமானங்களையாயினும் அவர்கள் எழுதும் தெளிந்த பாஷை நடையின் இனிமையும் ஒருமுறை வாசித்தவர்க்கே புலப்படும்.

## மகாவிகடதூதன்.

இது சென்னைமாநகரில் மாதம் நான்குமுறை தமிழில் வெளிவரும் ஒரு விநோதப் பத்திரிகை. இதில் சமாசாரங்களும், ஒருமுறை வாசிப்பின் பின் மூன்று நாட் செல்லினும் நீங்காத நகைப்பையும் பெருமகிழ்வையும் மிகுந்த களிப்பையும் செய்யும் பளபளப்பு வாய்ந்த சரித்திரத்தின் போக்குகளும் விகட விலாசமாகிய விநோதச் செய்யுள்களும் வேதாந்தங்களும் பிறதேச வர்த்தமானங்களும் அளவிறந்த வியாபாரிகளின் அரிய விளம்பரங்களும் அமையப்பெற்றுள்ளன. இதன் பத்திராதிபர் அநுபவ ஞானநூலென்னும் பூலோக விநோதக்கதை முதலிய பல நூல்களுக்கும் ஆசிரியர்.

## மாதர்மனோரஞ்சினி.

இது சென்னைமாநகரினின்றும் புத்தகரூபமாக வெளிவரும் ஒரு மாதாந்தத் தமிழ்ப்பத்திரிகை. இதில் இடப்பட்ட பெயருக்கு இசைய மாதர்கள் கொண்டொழுகவேண்டிய ஒழுக்கங்கள் இவை இவையென்றும், அவர்களுக்குக் கல்வி எவ்வகையால் எவ்வெப்பொழுது எங்ஙனம் ஊட்டப்பட வேண்டுமென்பதும், எடுத்துக்கொண்ட விஷயத்தைச்சாதித்தற்குப் பாரசீகம், பரோடா, வங்காளம் முதலிய தேயமாதர்களது கல்வியொழுக்க நலங்களை எடுத்துக்காட்டி மேற்கோள்வகைகளால் வற்புறுத்தும் வகைமைகளும் முற்காலத்திருந்தஸ்திரீரத்தினங்களுடைய அரிய திவ்விய சரித்திரங்களும், மாதர் மனங்களை ரஞ்சிதம்செய்து கற்புநிலையிற் தவறாது தருமவழியே கொண்டுசெல்லும் கற்பனாசரித்திரங்களும், குடும்ப சம்ரக்ஷணங்களும் பெண்பாடசாலைகள் விருத்தியடைதற்கேற்ற வழிவகைகளும் அப்பாடசாலைகள் அபிவிருத்தியடையும் நாடுகளும் அங்கே அம்முயற்சியின் தலைநின்று உபகரிக்கும் அபிமான சிலர்களின் நாமங்களும் நமது பெண்மணிகள் நமது சகோதரிகளின் பொருட்டு உபகாரசிந்தை யுடையவர்களாய் இருத்தல் வேண்டுமென்பதும் இன்னும் அவர்கள் (மெல்லியல்)என்னும் பெயருக்கு. அமையப் பொறுமை கலகமின்மை முதலிய நற்குணங்களாகிய ஆபரணங்களை அணிந்துகொள்ள வேண்டு மென்பதும் இவைபோன்ற அரிய விஷயங்கள் பலவும் முறையே எழுதப்பட்டு வருகின்றன. இதன்பத்திராதிபர் கோயம்புத்தூர் பிரமஸ்ரீ. சி. எஸ். இராமசுவாமி ஐயர் அவர்கள். இதற்கு ஆங்கிலேய பாஷா விற்பன்னர்களேயன்றி ஸ்ரீமதி. மங்களாபாய்முதலிய எமது சகோதரிகளாகிய பண்டிதரெத்தினங்களும் விஷயதானம் செய்து வருகின்றார்கள். நம்மூர்ப் பெண்மணிகளாகிய சகோதரிகளனைவரும் இதனைவாங்கி வாசித்து வருதல் மிருந்த நலமாகும்.

## வித்தியாபாநு.

இது மதுரையினின்றும் வெளிவரும் ஓர்மாதாந்தத்தமிழ்ப்பத்திரிகை. இதில் திருவள்ளுவர் குறளிற்போல அறம் அருள் அன்பு சூது முதலியவற்றுள் இவை இவை ஆகாவென்றும் அவற்றால்வரும் தீமைகளும் ஆவன இவை இவை என்றும் அவற்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ருல்வினையும் நன்மைகளும் பிறவும் நன்குவிளக்கி எழுதப்பட்டுவருகின்றன. கதைவாயில்களாகவும் அரியநீதிகளும் அறிவுறுத்தப்படுகின்றன. பிரமஸ்ரீ. ஆர். சேதுநாராயணசர்மா. பீ. ஏ. பீ. எல். ஆர். எஸ். நாராயணசாமிஐயர். பீ. ஏ. பீ. எல். முதலிய அறிஞர்கள்பலர் இதற்கு விஷயதானஞ் செய்து வருகின்றார்கள். வடமொழியிலே காளிதாசன் முதலிய மகாகவிகள் பலர் இயற்றிய பல காவியங்களும் மொழிபெயர்க்கப் பட்டும் வருகின்றன. சமாசாரங்கள் தாமும் எழுதப்படும்பொழுது கல்விக்கும் நல்லொழுக்கத்திற்கும் இன்றியமையாதுவேண்டப்படுவனவே தெரிந்தும் எழுதப்படுகின்றன.

### விஜயலட்சுமி.

இது யாழ்ப்பாணம் திருநெல்வேலியினின்றும் வெளிவரும் ஒரு மாதாந்தத்தமிழ்ப் பத்திரிகை. இதில் சைவசமயாசாரங்களும் விபூதி உருத்திராக்கம் முதலிய சிவ சின்னங்களின் மகிமைகளும் இன்னும் அவைகளுக்கு வேண்டுவன பிறவும் நன்கு எழுதப்படுகின்றன. பலவர்த்தமானங்களும் சோதிஷம் வைத்தியம் முதலியவைகளைப் பற்றிய வியாசங்களும் பதார்த்த சாரங்களும் தொடர்பாய் வருகின்றன.

மேலே காட்டப்பட்ட பத்திராதிபர்கள் எமது பத்திரிகையை ஏற்றுத் தம் பத்திரிகைகளை அனுப்பி வருகின்றார்கள். அவர்களுக்கு நன்றியறிதலான வந்தனம் கூறி எமது பத்திரிகையையும் அனுப்பி வருகின்றோம்.

---

## புத்தகவரவு.

### மேகதூதக்காரிகை.

(காரிகை—கட்டளைக்கலித்துறை.)

இது வடநூற்கடலை நிலைகண்டவரும் கவிஞர் செய்துவரும் கவிகளின் சொற்சுவை பொருட்சுவைகளைப் பொறிகளார மகிழ்வோடுண்டு தன்பால்வரும் கவிஞர்கள் கடலை எந்தே கடந்தவரும் தாம் நுகர்ந்தின்புற்ற நூற்சுவைகளைப் பிறரும் நுகர்ந்தின்புற "போஜசம்பு" என்னும் வடமொழி இராமாயணத்தை, இயற்றினவரும் ஆகிய போஜராசனுடைய சபையிலே கவிஞர் சிகாமணியாய் விளங்கிய காளிதாச மகா கவியாற் செய்யப்பட்டது. குபேரனாற் சாபம்பெற்ற இயக்கனொருவன் முகிலை முன்னிலையாக்கி அதனிடத்தே தன் மனைவியாற் றூது சொல்லியனுப்பிய பாவனையாகப் பற்பல பொருள்களையும் விசேடங்களையும் வர்ணித்துப் பாடப்பட்டுள்ளது. ஆங்கிலேய பாஷையில் இதில் ஓர் பாகம் எச். எச். உவெல்சன் என்னும் பண்டிதரால் மொழிபெயர்க்கப்பட்டிருக்கின்றது. இதனைத் தமிழ்நாட்டாருக்கு உபயோகமாக வண்ணார்பண்ணைச் சைவப்பிரகாச வித்தியாசாலைத் தலைமையுபாத்தியாயரும், மதுரை, யாழ்ப்பாணத் தமிழ்ச்சங்கப் புலவர்களுள் ஒருவரும் அநேக நூல், உரை ஆசிரியருமாகிய சுன்னாகம் ஸ்ரீமத். அ. குமாரசுவாமிப்புலவர் அவர்கள் தமிழிலே மொழிபெயர்த்துக் கலித்துறைப்பாவால் இயற்றினார்கள். கலித்தொகையை அச்சிட்ட ஸ்ரீ. சி. வை தாமோதரம்பிள்ளை அவர்கள் "அவையல்கிளவிகளாக" வரும் சிற்சில பதங்களை நீக்கிவிட்டமைபோல, சுரதக் கிரீடையை வர்ணித்துச்செல்லும் சில சுலோகங்கள் இக்காலத்துக்கேற்ப மொழிபெயர்க்கப்பட்டில்து. ஒவ்வொரு சுலோகத்தின் கருத்தையும் கலித்துறையில் அமைத்து இடங்கடோறும் சுவைகனிந்தொழுகப் பாடிய செயற்கருஞ் செயல் கவிபாடும் பயிற்சியுடைய கவிஞர்க்கேயன்றி ஏனையோர்க்குக் கண்டறிதற்கு உரியதன்றாம். வடமொழியிலிருந்தவாறே வர்ணனைகளும் அமைக்கப்பட்டுள்ளன. அர்த்தபுஷ்டியும் இன்னோசையும் பொருந்தக் கட்டளைக்கலித்துறை பாடும் புலவர்களது ஒப்பற்ற ஆற்றலுக்கு இந்நூலே தக்கசான்றாகும். இவ்வரிய நூல் புலவர் அவர்களாலேயே எழுதப்பட்ட அரும்பத விளக்கத்தோடு, கொக்குவில் சோதிடப்பிரகாச யந்திரசாலையில் அச்சிடப்பட்டிருக்கின்றது. எவர்க்கும் இந்நூல் வேண்டப்படுவதொன்றாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இதில் எமக்கு அனுப்பிய பிரதியைப் பெற்றுப் புலவரவர்களுக்கு ஸ்துதி கூறுகின்றேம். இதன் விலை சதம் உ௫. (அணா ௪.)

## விளம்பரம்.

பாஜீகாண கோர்தாம தயாரிசாயன தாது புஷ்டி ஹல்வா. விலை 1 ரூ. ௫ 1.

எஸ். சி. லாலா,
வண்ணார்பண்ணை, யாழ்ப்பாணம்.

## பத்திரிகைவேதனம்.

| | ரூ. | ச. |
|---|---|---|
| உள்ளூருக்கு வருஷம் ௧-க்கு | ௨ | 00 |
| இலங்கை இந்தியாவுக்கு வருஷம் ௧-க்கு ... ... | ௨ | ௨௫ |
| பினங்கு சிங்கப்பூர் வருஷம் ௧-க்கு | ௨ | ௫௮ |
| மோரீஸ் நெட்டால் வருஷம் ௧-க்கு | ௩ | 00 |
| தனிப்பிரதி ... ... | | ௨0 |

கையொப்பநேயர்கள் பத்திரிகை வேதனத்தை முற்பணமாக அனுப்புதல் வேண்டும்.

## விளம்பரவேதனம்.

| | ரூ. | ச. |
|---|---|---|
| வரி ௧-க்கு ... ... | | ௮ |
| காற்பத்திக்கு ... | ௧ | 00 |
| அரைப்பத்திக்கு ... | ௨ | 00 |
| ஒருபத்திக்கு ... ... | ௩ | ௫0 |
| ஒருபக்கத்துக்கு ... | ௬ | 00 |

போ. மாணிக்கம்பிள்ளை
ஞானப்பிரகாசஆபிஸ்
வண்ணார்பண்ணைப்போஸ்ட்
யாழ்ப்பாணம்.

தூய்யவேதோர்மறைகளாலுக் ஆதிக்கிடற்கரியசெவ்வேள். செய்யபோடிகள்வாழ்க சேவலுமயிலும் வாழ்க; வெய்யசூர்மார்புகீண்ட வேற்படைவாழ்க வன்றன்; பொய்யில்சீரடியார்வாழ்க வாழ்கவிப்புவனமெல்லாம்.

*Printed and published by the Proprietor and Publisher* **P. Manickam Pillai** *at the Tirugnanasampanther Press, Jaffna*

குமாரசுவாமிப்புலவர் நூலகம்
புலவகராகம்,
மயிலணி : : சுன்னாகம்,
இலங்கை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org